மலர்-5 இதழ்-103 டிசம்பர் 1-15 2020 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

## மெயில் புக்

**உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்**

ஆன்மிகமலர்
mobile app
GET IT ON Google Play




மாதமிருமுறை

## குடும்ப பிரச்சனை, கண் பிரச்சனை, திருமணதடை, நவகிர பிரச்சனை தீர்க்கும்

# ஞாயிறு ஸ்தலம்

## அம்பிகை வாசம் செய்யும் பசு நெய் விளக்கு

தீபமானது அகல் விளக்கு, காமாட்சி விளக்கு, குத்து விளக்கு, கிளியன் சட்டி என பல வடிவங்களில் ஏற்றப்படுகிறது.

கிளியன் சட்டி எனப்படும் களி மண்ணாலான விளக்கில் பசு நெய் கொண்டு, பஞ்சு திரியிட்டு விளக்கேற்ற வேண்டும். அம்பிகை வாசம் செய்வதாக நம்பப்படும் பசு நெய்யை தீபத்தில் இடும்பொழுது, அது சிவமாகிய ஜோதியுடன் சேர்ந்து சிவசக்தி சொரூபமாகிறது.

**வாழை இலை:**

தீபம் வைக்கும்போது கண்டிப்பாக ஒரு சிறு சிறு துண்டுகளாக நறுக்கிய வாழை இலையை கீழே வைத்து அதன் மீது விளக்கு வைக்க வேண்டும்.



வாழை இலைக்கு பதில் பசு சாணம் கூட வைக்கலாம்.



## எமனுக்குச் சொந்தமான தெற்கு திசை விளக்கு

உயிர் சக்தியானது உடலை விட்டு பிரிந்து விட்டால் உடலானது வெற்றுடலாக மாறி விடும். அவர்கள் உடலில் இருந்து வாயுக்கள் வெளியேற தொடங்கிவிடும். ஆன்மீகரீதியாக அவர்கள் உயிர் அலைகள் அந்த இடத்திலேயே சுற்றிவரும்.

இந்த அலைகள் மற்றவர்கள் உடலில் நுழையாமல் தடுக்கவே இறந்தவர் விட்டில் விளக்கேற்றி வைக்கப்படுகிறது.

இந்த விளக்கு தெற்கு திசை நோக்கி ஏற்றி வைக்கப்பட வேண்டும், ஏனெனில் இதுதான் மரணத்தின் கடவுளான எமனுக்கான திசையாகும். விளக்கேற்றி வைத்தபின் எமதர்மரிடம் அந்த அலைகள் தன்னை நெருங்காமல் விளக்கின் தீபத்திற்கு செல்லும்படி வேண்டிகொள்ள வேண்டும்.



## நாசாவை மிஞ்சிய சித்தர்களின் அறிவு

சூரியனில் இருக்கும் வாயுக்களில் ஹைட்ரஜன், மற்றும் ஹீலியம் என்பது விஞ்ஞானிகளின் ஆய்வு. இதனை கோரக்கர் என்னும் சித்தர்,

“பருதி தனில் பிரணமிலா நீரின்வாயு
நிறைய மீதக் காலே சோம்பல் பிராண
காரிரும்பென கண்டோமே”

என்றார். பிராணமிலா நீர்வாயு என்பது ஹைட்ரஜன் வாயுவைக் குறிக்கும். இது சூரியனின் எடையில் முக்கால் பகுதி எனவும், INERT எனப்படும் ஹீலியம், ஆக்சிஜன், கார்பன், இரும்பு என்றும் பொருள்படுகிறது.

இதையே இன்றைய NASA விஞ்ஞானிகள் உறுதிப்படுத்துகின்றனர்.

“பருதி நிறை சூடுமலராம்
புவியெப்ப அஸ்டோத்திர
நிறையாம் மங்களவர்ணமாய்
புவி காட்ட, மண்டல நீலமே கரு”

என்றார் புலிப்பாணி.



## கண்ணப்பர் வணங்கிய சிவன்



கண்ணப்ப நாயனர் புராணத்தில், இறைவனுக்கே கண் கொடுத்து கண்ணப்பர், நாயனார் ஆவதற்கு காரணமாகி, அவரால் வணங்கப்பட்ட லிங்கம் இதுதான்!



இதை பெரும்பாலும் யாரும் பார்த்ததில்லையாம், காரணம் கண்ணப்பர்மலை, காளஹஸ்தியில் அடர்ந்த வனத்துக்குள் உள்ளதாம்.



## ராமன் கட்டளையும் சீதா தீக்குளித்ததின் ரகசியமும்

ராவணனின் யாகசாலையில் வேலைசெய்த அக்னிபகவான் பல பாவங்களை செய்ய வேண்டியதாக இருந்தது. பல முனிவர்களையும் சாதுக்களையும் ராவணனின் உத்தரவுப்படி அவன் அழித்தான். இந்த பாவத்தில் இருந்து நீங்கி பரிசுத்தம் ஆகவேண்டுமானால் சீதா தேவி என்னுள் மூழ்கி எழவேண்டும் என கோரிக்கை விடுத்தான்.

ராமனும் அதை ஏற்றுக்கொண்டு சீதாவை தீயில் மூழ்கிவரும்படி உத்தரவிட்டான். பகவானின் உத்தரவை ஏற்ற சீதா தீக்குள் இறங்கினாள். அவளது கற்புத்தீ முன் அக்னியின் பாவங்கள் எல்லாம் அழிந்து போயின. இதுதான் சீதாதேவி அக்னிக்குள் இறங்கிய வரலாறு.



நெருப்பையும் பரிசுத்தமாக்கும் வல்லமை பெற்றவள் சீதாதேவி.



## எதிரிகள் பிரச்சனை தீர

மூன்று பெரிய இடம் புரி சங்கை அமாவாசை திதி அன்று அபிஷேக ஆராதனை செய்து காளி அல்லது துர்கையை மனதில் நினைத்து கொண்டு பூஜை முறையுடன் அபிஷேக ஆராதனை செய்து ஒரு சங்கை வாசற்படியில் புதைத்து விட்டு இரண்டாவது சங்கை ஒரு சிகப்பு துணியில் கட்டி உத்திரத்தில் கட்டிவிட வேண்டும், மூன்றாவது சங்கை பூஜை அறையில் ஒரு பித்தளை கின்னத்தில் வைத்து அச்சங்குடன் கரு குங்குளியமும் மூன்று விரல் மஞ்சளையும் சேர்த்து வைத்து சந்தனம் பொட்டு இட்டு அமாவசை பௌர்ணமி வெள்ளி செவ்வாய் கிழமைகளில் காளிதேவியையோ அல்லது துர்கையையோ நினைத்து பூஜித்து வந்தால் எதிரிகள் பிரச்சனை இருக்காது மற்றும் செய்வினை தொல்லைகள் அகலும். குடும்பம் சுபிக்ஷம் பெருகும்



## திருநீறு அணிந்தால்

- ❖ உடல் நாற்றம் போகும்
- ❖ நோய்க்கிருமிகள் சாகும்
- ❖ தீட்டுகள் கழியும்
- ❖ வியாதிகள் ஒழியும்
- ❖ பில்லி சூனியம் போகும்
- ❖ முகத்திற்கு அழகுதரும்
- ❖ ஞாபகசக்தி வளரும்
- ❖ புத்திக்கூர்மையாகும்
- ❖ ஞானம் உண்டாகும்
- ❖ பாவங்களை தீர்க்கும்
- ❖ பரமனடி சேர்க்கும்.

கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமல் பூசி மகிழ்வாரே
யாமாகில் தங்கா
வினைகளும் சாரும்
சிவகதி சிங்காரமான
திருவடி சேர்வரே.

– திருமூலர்



## பகலில் மட்டுமே இறுதி சடங்குகள்

அனைத்து இறுதி சடங்குகளும் பகல் நேரத்தில் மட்டுமே செய்ய வேண்டும், உடலை தகனம் செய்வது முதன்மையானதாகும். ஏனெனில் இரவு என்பது எதிர்மறை சக்திகள் அதிகம் உலவும் மேலும் அவற்றின் பலமும் இரவு நேரங்களில் அதிகம் இருக்கும். இறந்த எதிர்மறை சக்திகள் எப்பொழுதும் மற்ற உடல்களில் நுழைய முயலும்.

எதிர்மறை சக்திகளின் இந்த தாக்குதல்களை தவிர்க்கவே உடல் பகல் பொழுதில் தகனம் செய்யப்படுகிறது. அறிவியல்ரீதியாக கூறும் போது இறந்தவர்களின் உடலில் இருந்து வெளிப்படும் நுண்ணுயிர்களின் அளவு அதிகமாக இருக்கும். இது சுற்றி இருப்பவர்களுக்கு எளிதில் தாக்கக்கூடும். அதனால்தான் உடல் தகனம் பகலில் செய்யப்படுகிறது.



# அசைவம் சாப்பிடலாமா கூடாதா?



இந்து சமயத்தில் மட்டுமே உண்ணும் உணவில் கூட, இறைநிலை அடையும் வழிமுறைகளை நம் முன்னோர் வகுத்து கூறியுள்ளனர்.

ஆனால் அதில் கூட ஒருசில சந்தேகம் விளைந்தவண்ணம் உள்ளது. சைவம், அசைவம் சாப்பிடலாமா என்ற பல்வேறு குழப்ப நிலை உள்ளது. ஆதிகால முனிவர்கள் அசைவம் சாப்பிட்டதாகவும், இல்லை என்றும் வாதிடும் நடைமுறை இன்றும் உள்ளது.

உண்மையில் அசைவம் சாப்பிடலாமா, கூடாதா என்ற கேள்வி ஒஷோ விளக்கமாக பதில் கூறியுள்ளார்.

இதோ ஒஷோ அவர்களின் பதில்...

உணவுக்கும் இறைவனுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை. உணவுக்கும் கடவுள் கோபிப்பார் என்பதற்கும் எந்த சம்மந்தமும் இல்லை...

உணவுக்கு கடவுள் தண்டிப்பார் என்பதற்கும் எந்த சம்மந்தமும் இல்லை.

ஆனால்,

- உணவுக்கும் உடலுக்கும் சம்மந்தம் உண்டு.
- உணவுக்கும் கர்மாவிற்கும் சம்மந்தம் உண்டு.
- உணவுக்கும் குணத்திற்கும் சம்மந்தம் உண்டு.
- உணவுக்கும் மனிதன் வாழ்விற்கும் சம்மந்தம் உண்டு.
- உணவுக்கும் மனிதன் ஆயுளுக்கும் சம்மந்தம் உண்டு.
- உணவுக்கும் மனித மனதிற்கும் சம்மந்தம் உண்டு.
- மனதிற்கும் இயற்கைக்கும், இறைவனுக்கும் சம்மந்தம் உண்டு.

கர்மாவின் காரணமாக பிறவி எடுத்தவன் மனிதன். அந்த அதைக் கரைக்கவே மனித பிறவி.

**தாவர உயிரினங்களுக்கு கர்ம பதிவுகள் குறைவு மாமிச உயிரினங்களுக்கு கர்ம பதிவுகள் அதிகம்.**

எந்த உணவை மனிதன் உண்டாலும் அந்த உணவான உயிர்களின் பாவ கணக்கை அந்த மனிதனே அடைக்க வேண்டும்.

அம்மாவை தேடி அலையும் தாயில்லாத குஞ்சுகள் மற்றும் குட்டிகள், தாயின் மனம் மற்றும் அந்த குட்டியின் மனம் எவ்வாறு தேடி தவித்து இருக்கும்?

அதன் தாயை கொன்று தின்னும் மனிதன் உணர வேண்டியது இதுதான்.

அதிக பாசம் உள்ள ஆடு கோழி மீன் இவைகளை மனிதன் உண்பது பாச தோஷம் ஆகும்.

அந்த தோஷத்தை மனிதன் அடைந்தே தீருவான் அந்த கர்மாவையும் சேர்த்து கரைக்க ஒருவன் தைரியமாக முன்வந்தால் அவன் தாராளமாக அசைவம் உண்ணலாம்.



இதில் கடவுளுக்கு என்ன பிரச்சனை???

ஒருவர் வங்கியில் ஒரு லட்சம் கடன் வாங்குகிறார், மற்ற ஒருவர் ஒரு கோடி வாங்குகிறார். இதில் மேனேஜருக்கு என்ன பிரச்சனை கடன் வாங்கியவனே கடனை கட்ட வேண்டும்.

சில நேரங்களில் விரதம் இருப்பது உடலுக்கு மட்டும் நல்லதல்ல பிறந்த பிறவிக்கும் நல்லதே.

காரணம், அந்த விரத நாளில் மனிதனால் எந்த உயிரும் பாதிக்காததால்.

காட்டில் கூட ஆடு மாடு யானை குதிரை ஒட்டகம் இவைகளை மிருகம் என்று யாரும் கூறுவது இல்லை.

புலி சிங்கம் போன்ற அசைவ உணவு உண்ணியே மிருகம் என்று கூறுகின்றோம்.

ஆக, சைவ உண்ணிகளுக்கு மிருகம் என்ற பெயர் காட்டில் கூட இல்லை.

உடலால் மனித பிறவி சைவம்...

உயிரால் மனித பிறவி சைவம்...

குணத்தால் மனித பிறவி அசைவம் மற்றும் சைவம்.

ஆடு, மாடு, மான், யானை போன்றவை உடலால் சைவம், உயிரால் சைவம், மனதாலும் சைவம்.

ஆகவே, மனித பிறவியின் உணவு சைவமாக இருத்தலே மனிதனின் தர்மமாகிறது என்பதால் அறிவில் சிறந்த நம் முன்னோர்கள் மனித பிறவிக்கு சிறந்தது சைவம் என வழி காட்டி சென்றார்கள்.

# அகற்றமுடியாத சிவலிங்க பீடம்

ஔரங்காபாத்தில் உள்ளது ஹஜ்ரத் ஜலாலுதின் தர்கா, இந்த தர்கா ஒருகாலத்தில் சிவன் கோவிலாக இருந்தது. ஒருசில வரலாற்று நிகழ்வால் தர்காவாக மாற்றப்பட்டது.

கோவிலை மாற்றியவர்கள் அதில் உள்ள சிவலிங்க பீடத்தை அகற்ற முடியவில்லை.

அதை அகற்ற ஆயிரக்கணக்கான முறை முயற்சித்தும் அவர்களால் முடியவில்லை.

ஒன்று சிவலிங்கத்தை அகற்ற வரும் JCB எந்திரங்கள் பழுதாகி சேதமடையும், இல்லையென்றால் சிவலிங்கத்தை அகற்ற முயற்சி மேற்கொள்ளும் தரகருக்கு ஏதாவது ஒரு விதத்தில் மரணம் சம்பவிப்பது வழக்கமாகி வருகிறது.

இதனால் அந்த சிவலிங்கத்தை இன்று வரை அகற்றும் முயற்சியை கைவிட்டுவிட்டனர்.

எத்தனை அடி ஆழத்திலிருந்த மிகப்பெரிய பாறையின் மீது சிவலிங்கத்தை செதுக்கி வழிபட்டார்களோ நம்முன்னோர்கள்.




ஆன்மிகமலர் மெயில் புக்

# குடும்ப பிரச்சனை கண் பிரச்சனை திருமணதடை நவகிர பிரச்சனை தீர்க்கும்

# ஞாயிறு ஸ்தலம்








உலகில் பல்வேறு சிவாலயங்கள் இருந்தாலும், ஒவ்வொரு தலங்களும் ஒவ்வொரு சிறப்பு இருக்கும். பெரும்பாலானசிவாலயங்களின் வரலாற்றைதெரிந்து கொள்ளாமலேயே கோவிலுக்கு சென்று இறைவனை வழிபட்டு வருகிறோம். இந்த வகையில் நமது ஆன்மிகமலர்.காம் இணையதளம் சார்பில் ஒவ்வொரு தலங்களின் வரலாற்றையும் தொகுத்து வழங்க சிறு முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம்.

அந்தவகையில் சென்னை, திருவள்ளூர் எல்லையில் அமைந்துள்ள ஞாயிறு ஸ்தலத்தைப் பற்றி விரிவாக பார்ப்போம். இந்த ஸ்தலம் சென்னை கோயம்பேடு பேருந்து நிலையத்திலிருந்து 30 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இத்தலம் செல்ல பல்வேறு பேருந்துகள் உள்ளது.

இந்த ஸ்தலத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானை புஷ்பரதேஸ்வரர் என்றும் தாயாரை சொர்ணாம்பிகை என்றும் அழைக்கப்படுகிறார்.

இத்தலம் சுமார் 2000 வருடங்கள் பழமையான ஸ்தலமாக போற்றப்படுகிறது,

சோழ மன்னர் வம்சத்தில் வந்த மன்னர் இந்த ஊருக்கு அருகில் இருக்கும் சோழவரத்தில் தங்கினான். காலையில் சிவனுக்கு பூஜை செய்வது இவனது வழக்கம். அதன்படி அன்று அதிகாலையில் சிவ பூஜை செய்வதற்காக செந்தாமரை மலர்களைத் தேடினான், இறுதியில் இந்த ஞாயிறு கிராமத்தில் குளம் முழுக்கத் தாமரை மலர்கள் நிறைந்து இருந்ததைப் பார்த்து மகிழ்ந்தான்.



அதில் ஒரு குறிப்பிட்ட தாமரை பட்டொளி வீசி மின்னியது, அம்மலரின் வசிய ஒளியால் கவரப்பட்ட மன்னன் அந்த மலரைப் பறிக்க முற்பட்டான், அவன் அந்த மலரை நெருங்க நெருங்க மலர் விலகிக் கொண்டே போனது. கடைசியில் பொறுமையை இழந்தான் மன்னன். அந்த அபூர்வ தாமரை மலரை நோக்கித் தனது வாளை வீசினான்.

அந்தக் கத்தி, தாமரையை கொய்ததுடன், இத்தனை நாட்களாக தண்ணீருக்கு அடியில் பாதுகாத்து கொண்டிருந்த சிவலிங்கத்தின் மீது பட்டு லிங்கத்தின் மீதிருந்து ரத்தம் பீரிட்டு, குளம் முழுக்க பரவியது. அத்துடன் பேரொளியும் வீசியது. அதை பார்த்த மன்னனின் கண்கள் பறிபோனது.

சிவபெருமான் பேரொளியுடன் மன்னனுக்குக் காட்சி தந்து, மீண்டும் பார்வை கொடுத்தார். இதுநாள் வரை சிவபூஜை செய்து வந்ததின் பலனாகவே இறைவன் காட்சி தந்ததை எண்ணி மகிழ்ந்த மன்னன் அந்த இடத்திலேயே சிவபெருமானுக்கு கோவில் எழுப்பினான்.

மலர் வழியாக இறைவன் காட்சி தந்ததால் `புஷ்பரதேஸ்வரர்' என்று அந்த சிவலிங்கத்திற்குப் பெயரிட்டு வழிபட்டான்.

மன்னன் வீசிய கத்தியால் ஏற்பட்ட காயம் இன்றும் லிங்கத்தின் மீது இருப்பதை காணலாம். இதனால் பார்வை சம்பந்தப்பட்ட கோளாறு இருப்பவர்கள் இந்த ஞாயிறு ஸ்தலத்திற்கு வந்து, புஷ்பரதேஸ்வரரை வணங்கினால் நல்ல பலனை பெறலாம்.

இதே போன்று, கணவன் மனைவி இடையே உள்ள பிணக்கை தீர்க்கும் பெருமானாக `புஷ்பரதேஸ்வரர்' விளங்குகிறார்.



கீதா-ராஜன்

தேவர்கள் அசுரர்கள் தவறு செய்வதும், அதற்கு சாபம் பெறுவதும், அந்த சாபத்திற்கு விமோர்சனம் பெற பூமியில் உள்ள ஆலயங்களை தொழுவது வழக்கமாக நடைபெறும் நிகழ்வுகளாகும்.

தேவலோக சிற்பி விஸ்வகர்மா மகளான சமுக்ஞாவை திருமணம் செய்து கொண்டார் சூரியன். ஒருசமயம் சூரிய பகவான் ஒருசில தவறுகளை செய்ததின் பலனாக பிரம்மதேவன், சூரியனின் ஜீவாலை அதிகமாக சாபம் விடுகிறார், இந்த சாபத்தை பெற்ற சூரியனின் தீ ஜீவாலை நாளுக்கு நாள் அதிகமாகி அவரின் பக்கம் யாரும் நெருங்கி வரமுடியாத படி உடல் உஷ்ணம் அடைகிறார்.

சூரியனின் வெப்பத்தை தாங்க முடியாமல், தனது நிழலையே உருவமாக செய்து கணவனிடம் விட்டு சென்று விட்டாள் சமுக்ஞா.

தனக்கு ஏற்பட்ட இந்த சாபத்திற்கு விமோர்சனம் வேண்டி பிரம்மதேவனை குறித்து சூரியதேவன் தியானத்தில் ஈடுபடுகிறார். சூரியனுக்கு காட்சியளித்த பிரம்மதேவன், பூலோகத்தில் உள்ள புகழ்பெற்ற சிவாலயங்களில் வழிபட்டு, சிவனை ஆராதித்தால் சாபத்திலிருந்து விமோர்ச்சனம் கிடைக்கும் என்று வழிமுறைகளை கூறுகிறார்.

அப்போது ஒரு ஜோதி வானில் தோன்றியது, அதை பின்தொடர்ந்து சூரியன் சென்ற போது அது ஒரு தாமரை தடாகத்தில் சென்று ஒரு தாமரை பூவிற்குள் ஐக்கியம் ஆனது. அங்கு ஒரு சிவலிங்கத்தை


www.aanmeegamalar.com

ஆன்மிகமலர்




ஞாயிறு ஸ்தலத்தின்
முழு வீடியோ
aanmeegamalar
YouTube
யூ-டியூப் சேனலில்
பதிவிடப்பட்டுள்ளோம்.
நமது சேனலில் சென்று
இத்தலத்தை
முழுவதுமாக பார்த்து
சிவனருள் பெறுங்கள்...

ஆன்மிக சேவை செய்யும் நமது சேனலை
Subscribe
like & share
செய்யுங்கள்


பிரதிஷ்டை செய்து சூரியன் வழிபட்டான்.

அந்த தாமரை மலரிலிருந்து தோன்றிய சிவ பெருமான் சூரியன் தனது மனைவியுடன் சேர்ந்து வாழும் படியாக அருள்புரிந்தார். சூரியனின் வேண்டுகோளுக்கிணங்க சிவபெருமான் இத்தலத்தில் எழுந்தருளினார்.

அந்த சமயத்தில் சூரியன் பூமியில் வழிபட்ட முதல் ஸ்தலம்தான் ஞாயிறு ஸ்தலம்.

அந்த மகிழ்ச்சியில் ஞாயிறு ஆலயத்தின் மூலவருக்கு எதிரிலேயே காட்சியளிக்கிறார் சூரியபகவான். அவர் நீராடி சிவனை வழிபட்ட தால் அங்குள்ள திருக்குளத்திற்கு சூரிய தீர்த்தம் என்று அழைக்கப்படுகிறது.

இந்த கோவிலில் இன்னொரு சிறப்பும் உண்டு. பிரிந்து போன கணவன் அல்லது மனைவி ஒன்று சேர இங்கே வழிபாடு நடத்துகிறார்கள்.

சூரியன் சிவபெருமானை நேரிடையாக வழிபட்ட ஸ்தலங்கள் சிறப்பு வாய்ந்த ஸ்தலங் களாக போற்றப் படுகிறது. இதுபோன்ற ஸ்தலங்களுக்கு பல்வேறு சிறப்பு உள்ளது. அந்த வகையில் தமிழகத்தில் சூரியன் ஐந்து இடங் களில் சிவபெருமானை வழிபட்டுள்ளார். இதில் முதல்ஸ்தலம் ஞாயிறு ஸ்தலமாகும். அடுத்து வரிசையாக நன்னிலம் அருகில் திருச் சிறுகுடி, ஆடுதுறை அருகில் திருமங்களகுடி, நீடாமங்கலம் அருகில் திருப்பரிதி நியமம், திருவாரூர் அருகில் தலைஞாயிறு என்று வரிசை யாக அமைந்துள்ளது.

இதுபோன்று சூரியன் வழிபட்ட ஸ்தலங்களை, பஞ்ச பாஸ்கர ஸ்தலம் என்று அழைக்கப்படுகிறது.

வருடத்தில் 7 நாட்கள் ஞாயிறு ஸ்தலத்தில் சிவபெருமான் மற்றும் தாயரை சூரியன் வழிபடு வதாக ஐதிகம் உள்ளது, இதனால் அந்த 7 நாட்கள் மதிய நேரத்தில் அர்ச்சகர்கள் சிவ பெருமானுக்கு பூஜை செய்வது கிடையாது. நேரிடையாக சூரியனே சிவ பூஜை செய்வதை மெய்ப்பிக்கும் வகையில் சித்திரை முதல் நாளிலிருந்து 7 நாட்களுக்கு ஆதித்தன் அலை கடலெழுந்து தன் ஆயிரம் கிரணங்களால் ஈசன் அம்மை இருவருக்கும் பாத சேவை புரிவது போன்று காலடியில் ஒளியைப் படரவிட்டு இறைவி, இறைவன் இருவரையும் வணங்குகிறார்.

இன்றும் பக்தர்கள் இக்காட்சியை இத்தலத்தில் பார்த்துவருகின்றனர். இந்த சூரிய பூஜை நடை பெறும் 7 நாட்களும் ஞாயிறு ஸ்தலத்தில் விழா வாக கொண்டாடப்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு தமிழ்ப் புத்தாண்டு தினத்திலும், தை மாதப் பிறப்பு அன்றும் சிறப்பு சூரிய வழிபாடு நடைபெறுகிறது.

பிரகாரத்தைச் சுற்றி கமல விநாயகர், வள்ளி தெய்வானை உடனாய சுப்ரமணியர், காலபைரவர், விசாலாட்சி சமேத விஸ்வநாதர், சங்கிலி நாச்சியார் ஆகியோருக்கு தனிச் சன்னதிகள் உள்ளன. சிவபெருமானின் உற்ற தோழனாக திகழ்ந்த சுந்தரரின் மனைவியான சங்கிலி நாச்சியார் பிறந்த ஊர்தான் ஞாயிறு, இங்கிருந்து திருவெற்றியூர் தியாகராஜர் திருக்கோவிலுக்கு பூமாலை கட்டித்தரும் சேவைபுரிந்து வந்தார் சங்கிலி நாச்சியார்.

சுந்தரர் திருவொற்றியூர் இறைவனை தரிசிக்க வந்தபோது, இறைவனுக்கு பூமாலை கட்டித் தரும் தொண்டினை செய்து வந்த சங்கிலி நாச்சியாரைக் கண்டார். அவளை மணந்து கொள்ள விரும்பினார். இறைவனை அவளிடம் காதல் தூது செல்லும்படி கேட்டுக் கொண்டார்.

நட்பிற்காக இறைவனே காதல் தூது சென்றதாலும், சங்கிலி நாச்சியாரின் பிறந்த ஊர் என்ற காரணத்தால் ஞாயிறு தலத்தில் சங்கிலி நாச்சியாருக்கு தனி சன்னதி உள்ளது.

ஞாயிறு தலத்தில் இருந்து இருபதடி தூரத்தில் சங்கிலி நாச்சியார் பிறந்த வீட்டை கோவிலாக கட்டி வழிபாடு நடத்து கின்றனர். எனவே திருமண பொருத்தம் பார்ப்பவர்கள், திரு மண நிச்சயம் செய்வதற்கு முன்பு ஞாயிறு தலத்திற்கு வந்து சிவனை வணங்கி சென்றால் திருமணம் சுபமாக நடைபெறும்.

– தொகுப்பு: கீதாராஜன், போன் 8825844033

## இலங்கை பக்தரின் நிறைவேரிய வேண்டுதல்



ஞாயிறு ஸ்தலத் தில் தொடர்ந்து ஆறு வாரங்கள் விளக்கேற்றி வழி பட்டு வேண்டிக் கொண்டால் நினைத்த காரியம் நிறைவேறும் என்பதால் நான் இலங்கையில் இருந்து வந்து தொடர்ந்து இத்தலத்தில் விளக்கேற்றி வழிபட்டு வருகிறோன்.

எனது பெரும்பாலான வேண்டுதல் நிறைவேறியுள்ளது. இது கடைசிவாரம், இத்தலத்திற்கு வருவது மனதிற்கு நிம்மதி யாக உள்ளது.

## கண் சம்பந்தப்பட்ட பிரச்சனை தீர்க்கும் ஈசன்

நவக்கிரக தோஷம் உள்ளவர்கள், தந்தை வழியில் பிணக்கு உள்ளவர்கள், தந்தை உடல்நிலையில் பிரச்சனை உள்ளவர்கள் ஞாயிற்றுக்கிழமை சூரிய ஓரையில், சிகப்பு துணி, கோதுமை, அகல்விலக்கு ஏற்றி வழிபட்டு சூரிய தீர்த்தத்தை தலையில் தெளித்து கொண்டால் அனைத்து பிரச்ச னைகளிலிருந்தும் நிவர்த்தி கிடைக்கும்.



நவகிரகங்களுக்கு தலைவனாக இருக்கும் சூரியனே இங்கு வழிபடுவதால் இந்த கோவிலில் நவகிரகத்திற்கு தனியாக சன்னதி கிடையாது.

கண்வமகரிஷி இத்தலத்தில்தான் முக்தி அடைந்தார், வியாச சர்மா என்ற சிவபக்தரின் சீடர்தான் கண்வமகரிஷி, இந்த கண்வ மகரிஷி மிகப்பெரிய கண்வைத்தியராகவும் திகழ்ந்தார், இவர் இத்தலத்தில்தான் முக்தியடைந்தார் என்ற காரணத்தால், கண் சிகிச்சை மேற்கொள்ளவிருப்பவர்கள், கண் அறுவைசிகிச்சை செய்யவிருப்பவர்கள் இத்தலத்து ஈசனை வழிபட்டால், கண் சம்பந்தப்பட்ட அனைத்து பிரச்சனைகளும் விலகும்.

ஸ்ரீ வில்லிபுத்தூர் ஆண்டாளின் அவதாரத் தலமாக திகழ்வதைப் போன்று, இந்த ஞாயிறு ஸ்தலம் சங்கிலி நாச்சியார் அவதாரத் தலமாக திகழ்கிறது.

சிவபெருமானின் உற்ற நண்பரான சுந்தரரின் காதலுக்கு சிவபெருமானே தூது சென்றுள்ளதால், நட்பால் கூட இறைவனை அடைய முடியும் என்பதற்கு உதாரணமாக விளங்கும் தலம் ஞாயிறு தலம்.

சங்கிலி நாச்சியாருக்கு இத்தலத்தில் தனி சன்னதியும் உண்டு. சங்கிலி நாச்சியார் பிறந்த இடம் இத்தலத்திலிருந்து 20 அடி தூரத்தில் உள்ளது. தற்போது இந்த இடத்தில் சங்கிலி நாச்சியாருக்கு தனியாக ஒரு சிறு சன்னதி கட்டப்பட்டுள்ளது.

குடும்பத்தில் கணவன் மனைவி பிரச்சனை உள்ளவர்கள் ஞாயிறு ஸ்தலத்தில் வழிபட்டு வேண்டிக் கொண்டால் நல்ல பலனை பெறலாம்.

பேட்டி: புனிதவேல்

தொடர்பு எண்:9841807572



ஆன்மிகமலர் மெயில் புக்



www.aanmeegamalar.com





ஞாயிறு ஸ்தலத்தின் அருகில் மதில்சுவர் மற்றும் பள்ளிக்கூடம் கட்ட 05.11.2002 அன்று பூமியை தோன்டும் போது, பூமிக்கடியில் பச்சை மரகதக் கல்லால் ஆன ஸ்ரீ சக்கரத்தாழ்வார், ஸ்ரீ லட்சுமி நாராயண சுவாமி சிலைகள் கண்டெடுக்கப்பட்டன. இந்த சிலைகளை ஞாயிறு கோவிலுக்கு வெளியே இருந்த மரத்தடியில் வைத்து வழிபட்டனர்.

இதையறிந்த சென்னையைச் சேர்ந்த குருஜி என்பவர் ஞாயிறு கோவிலை ஒட்டி ஒரு ஆலயம் எழுப்பி, ஸ்ரீ சீதா சமேத சொர்ண கல்யாணராமர் ஸ்ரீ சொர்ண சுதர்சணர், ஸ்ரீ யோக நரசிம்மர், ஸ்ரீராம ஆஞ்சநேயர் ஆலயத்தை நிர்மாணித்து, பொது மக்கள் வழிபட்டு செல்கின்றனர்.

இத்தலத்தில் பல்வேறு சிறப்பு பூஜைகள், மட்டைத்தேங்காய் வழிபாடு போன்றவை பிரசித்திப் பெற்று நடைபெறுகிறது.

குழந்தைபாக்கியம், தொழில் வளர்ச்சி போன்ற வற்றிற்கு இங்கு சிறப்பு பூஜைகள் பௌர்ணமி தோறும் நடைபெற்று வருகிறது.

ஸ்ரீசக்கரத்தாழ்வாரை தனிச் சன்னதியில் பிரதிஷ்டை செய்தும், ஸ்ரீலட்சுமி நாராயணனருக்கு தனிச்சன்னதி அமைத்து வழிபாடு நடைபெறுகிறது.

இத்தலத்தில் யோக நரசிம்மர் மற்றும் ஆஞ்சநேயருக்கும் சன்னதிகள் உள்ளது. இத்தலத்தை பற்றி மேலும் தகவல் தெரிந்து கொள்ள 9444218930 எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

தொகுப்பு: புனிதவேல்
தொடர்பு எண்:9841807572

# சிவன் கோவிலுக்கருகில் பெருமாள் கோவில்





எந்த விதமான கட்டணமும் இல்லை
தரத்தில் முதலிடம்
முற்றிலும் இலவசம்



உலக அளவில் தரமான ஆன்மிக இ-புத்தகமாக வெளிவரும் ஆன்மிக மெயில் புத்தகம்
இலவசமாக படிக்க
aanmeegamalar.com
aanmeegamalr app-லும் படிக்கலாம்
GET IT ON Google Play
உங்கள் இ-மெயில் முகவரியை எங்களுக்கு அனுப்பிவைத்தும் பெற்றுக்கொள்ளலாம் கீழ்கண்ட வாட்சப் எண் மற்றும் இமெயில் முகவரிக்கு உங்கள் இமெயில் முகவரியை அனுப்பிவைக்கவும்
வாட்சப்பில் பெற 08825844033
இமெயிலில் பெற aanmeegamalar@gmail.com
www.aanmeegamalar.com

# மூடனின் பகுத்தறிவு அறிவாளியின் பகுத்தறிவு

கண்ணதாசனின் 'கடைசி பக்கம்' புத்தகத்தில் பகுத்தறிவு பற்றி மிகத் தெளிவாக கூறியுள்ளார்.

அவர்கூறிய கருத்தை பார்ப்போம்...

பகுத்தறிவு உலகத்தை மாற்றி அமைத்தது.

காற்றில்லாத வீடுகளுக்குள்ளே மனிதர்கள் அடைபட்டு கிடந்த காலம் போய், சொகுசான ஒரு காலத்தை பகுத்தறிவு கொண்டு வந்தது.

உட்கார்ந்த இடத்திலேயே காற்று, படம், ஒலி, ஒளி, செயற்கை மழை போன்ற ஷவர் பாத்; சிங்கார வாகனங்கள்; செவ்வாய் கிரகத்துக்கே பயணம் செய்ய கூடிய எல்லாவற்றையும் விஞ்ஞானம் நமக்கு கொடுத்ததற்கு காரணம் பகுத்தறிவுதான்.

அணுவை பகுத்து அதன் அளப்பரிய சக்தியை கண்டு பிடித்த அறிவு. உண்மையிலேயே அற்புத மான அறிவுதான்.

அந்த பகுத்தறிவு, அதிலே இது உண்டு. இதிலே அது உண்டு. என்று காட்டிற்றே தவிர, எதையும் 'இல்லை இல்லை' என்று சொல்ல முயன்றதில்லை.

ஆனால், நமது ஊர் பகுத்தறிவோ, அது இல்லை, இது இல்லை; அது பொய்' என்று சொல்ல முனைந்ததே தவிர, எதிலே எது அடக்கம் என்று கண்டு கொள்ளக்கூடியதாக இல்லை.

ஒரு பகுத்தறிவாளர் எனக்கு ஒரு கடிதம் எழுதி இருந்தார்.

"அய்யா, 'சிவாய நமவென்று சிந்தித்திருப் போர்க்கு அபாயம் ஒரு நாளும் இல்லை' என் கிறார் களே, 'சிவாய நம' என்று சொல் லிக் கொண்டே ஆயிரம் வால்ட் மின்சாரத்தை தொட்டால் அபாயம் ஏற்படாதா?" என்று கேட்கிறார்.



நல்லது. அபாயம் ஏற்படத்தான் செய்யும்.

கொஞ்சம் அறிவோடு ஆராய்ந்தால் விஷயம் விளங்கும்.

அந்த பாடலை பாடிய அடியவர் "சிவாய நமவென்று மின்சாரம் தொடுவோர்க்கு அபாயம் ஒரு நாளும் இல்லை' என்று சொல்லவில்லை. 'சிந்தித்திருப்போர்க்கு' என்று தான் சொன்னார். அவர் சிந்தனையைசொன் னாரே தவிர செயலை சொல்ல வில்லை.

கடிதம் எழுதியவர் மீது குற்ற மில்லை. எல்லாம் நம்ம ஊர் பகுத்தறிவு படுத்தும் பாடு.

**நம்ம ஊர் பகுத்தறிவு ஓர் அழகான பெண்ணை கண்டால் அவளது அழகை யோ, பண்பையோ சிந்திப்பதில்லை. அவ ளுடம்பில் எத்தனை வீசை கறி, எத்தனை வீசை எலும்பு என்றுதான் ஆராயும்!.**

'மனதைப்





பகுத்தறியலாம்; உடம்பை பகுத் தறியலாமா? என்றுகூட யோசிப்பதில்லை!

**இந்து மத தத்துவங்கள் எடுத்த வேகத்தில் பிடித்து வைத்த பொம்மை களில்லை. பகுத்து பகுத்து அறிந்த பின்பே உருவாக்கப்பட்டவை.**

ஒன்பது ஓட்டைகள் இருந்தும், உடம்புக்குள்ளே ஒரு காற்று எந்த சக்திக்கு கட்டுப்பட்டு நீண்ட காலம் வெளியேறாமல் நிற்கிறது?

விஞ்ஞானிகளே யோசிக்கும் இடம் இது.

ஆனால், நம்ம ஊர் பகுத்தறிவு இதை யோசிக்காது. 'இது இயற்கையாகவே நிற்கிறது' என்று சொல்லும்.

எது அந்த இயற்கை?

மண்ணா?... மரமா?...

செடியா?... கொடியா?...

இப்போது மேல்நாட்டு விஞ்ஞானிகள் உடம் பில் இருந்து வெளியேறும் உயிர் எவ்வளவு வேகத்தில் வான மண்டலத்துக்கு பயணமாகிறது என்று ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

வெளியேறும் உயிரின் வேகம்தான் ஆராய்ச்சி யில் இருக்கிறதே தவிர, அது வெளியேறாமல் இருக்கும் வழி அவனுக்கும் தோன்றவில்லை; அடுத்த தலைமுறைக்கும் தோன்றவில்லை.

மானிட சக்திக்கு மேற்பட்ட மூலத்தை புகழ் பெற்ற விஞ்ஞானிகளே மறுத்ததில்லை.

சந்திர மண்டலத்து பயணிகள் கடவுளை வேண்டிக்கொண்டுதான் பயணமானார்கள்.

ஞானம் என்ற மூலத்திலிருந்துதான் விஞ் ஞானம் மெய்ஞானம் இரண்டுமே தோன்றின.

இரண்டுமே ஒரு மூலத்தை நம்புகின்றன.

'சுடு'என்று சொன்னவுடனே யாரை சுடுகிறோம் என்று பார்க்காமலே சுடுகின்ற படைகள்தாம் நாட்டுக்கு வெற்றி தேடி தந்திருக்கின்றன.

அதே நேரத்தில் படைகள் பகுத்தறிவை உபயோகிக்கத் தொடங்கினால், பகுத் தறிவு மிஞ்சும். நாடு மிஞ்சாது.

'போரில் தயக்கம் காட்டிய அர்ஜுன னைப் பார்த்து கண்ணன் அதை தான் சொன்னான்.

'போர் என்று வந்தபின் உறவினர்கள் என்ற ஆராய்ச்சி வெற்றிக்கு உதவாது ' என்றான். கடைசியில் கண்ணன் மீது மூடநம்பிக்கை வைத்து அர்ஜுனன் காண்டீபத்தை தூக்கினான்; முடிவு வெற்றியாக கனிந்தது.

கீதையில் கர்மயோகம் மானிடக் கடமைகளை வலியுறுதுகின்றது.

பக்தி யோகம் தியானத்தை வலியுறுத்துகிறது.

கடமையும் நம்பிக்கையுடன்தான் நடை பெறுகிறது; தியானமும் நம்பிக்கையுடன்தான் நடைபெறுகிறது. 'மனம் உண்டானால் வழி உண்டு' என்பது பெரியோர் வாக்கு.

அது மானிட தர்மத்துக்கும் பொருந்தும்.

ஆகவே தெய்வ நம்பிக்கையை மூடநம்பிக்கை என்று சொல்வதை பற்றி நான் வருந்தவில்லை.

"இந்த மூடனும், அந்த அறிவாளியும் நம்மிடம் தான் வரப் போகிறார்கள்" என்ற நம்பிக்கை தெய்வத்துக்கு இருக்கிறதே, யார் என்ன செய்ய முடியும்.



## வருடம் முழுவதும் திருவிழா நடைபெறும்

# திருக்கழுக்குன்றம்

மதுரை, திருவண்ணாமலை, சிதம்பரம் மற்றும் மைலாப்பூர் போன்ற தலங்களில் ஆண்டு முழுவதும் திருவிழாக்கள் நடைபெறுகின்றது. அதுபோல திருக்கழுக்குன்றத்திலும் வருடத்தில் 12 மாதங்களும் திருவிழாக்கள் நடைபெறுகின்றது. சித்திரை மாதம் துவங்கி பங்குனி மாதம் வரை நடைபெறும் திருவிழாக்களின் விவரம் கீழே:

### சித்திரை:

சித்திரை மாதம் அமாவாசை திதி கழித்த ஐந்தாம்நாள் திருமலையில் கொடியேற்றி பிரம்மேற்சவ திருவிழா பத்து நாட்கள் நடைபெறும்.இதில் 3ஆம் நாள் உற்வசமாக 63 நாயன்மார்கள் வேதகிரீஸ்வரர் மலையை கிரிவலம் வருவார்கள். ஐந்தாம்நாள் ரிஷப வாகனத்தில் ஸ்வாமி உலா வருவார். ஏழாம்நாள் உற்வசவத்தில் ஸ்வாமி தேரில் மாடவீதி உலா வருவார். பத்தாம் நாள் உற்வசத்தில் இரவில் இராவண வாகனத்தில் ஸ்வாமி மலை வலம் வந்து மலையில் கொடி இறக்கப்படும்.அதன்பிறகு உற்சவருக்கு பத்துநாள் விடாற்றி உற்சவம் கோயிலுக்குள் நடைபெறும்.

### வைகாசி:

மூல நட்சத்திரத்தில் திருஞான சம்பந்தருக்கு உற்சவம்.புனர்பூச நட்சரத்தில் அடிவார உற்சவம் ஆரம்பித்து விசாக நட்சரத்தில் நிறைவடையும். 10 நாள் திருக்கல்யாணம். ரிஷப வாகன சேவை. (தற்போது இந்த திருக்கல்யாணம் நடை பெறுவது இல்லை)

### ஆனி:

மக நட்சத்திரத்தில் மாணிக்க வாசகர் ஸ்வாமிகள் உற்சவம். ஆனிமாதத்தில் மலை அடிவாரத்திலிருந்து திருப்படி விழாவும் நடைபெறும். நால்வர் பாடல்களை பாடியபடி அடியார்கள் மலைமீது படியேறுவார்கள். இந்த உற்சவம் படி ஏற்றுவிழா என அழைக்கப்படு கின்றது. தற்போது பேச்சு வழக்கில் படி உற்சவம் எனஅழைக்கப்படுகின்றது. முந்தைய காலத்தில் யானை மீது திருமுறைகள் வைத்து மலையை சுற்றி வந்துள்ளார்கள்.உத்திர நட்சரத்திரத்தில் நடராஜர் அபிஷேகம் நடைபெறும்.

### ஆடி:

ஆடிமாதம் தாழக்கோயிலில் உள்ள திரிபுரசுந்தரி அம்மனுக்கு பரணி நட்சத்திரத்தில் ஆடிப்பூர உற்சவம் ஆரம்பம் ஸ்ரீதிரிபுர சுந்தரிக்கு மட்டும் உற்சவம் நடைபெறும். அம்மன் கோயிலின் முன்உள்ள கொடிமரத்தில்கொடி ஏற்றப்படும். பதினோறு நாள் உற்சவத்தில் அம்மன் விதவிதமான அலங்காரங்களில் விதவிதமான வாகனங்களில் பவனி வருவார். 11 ஆம் நாள் ஆடி உத்திரத்தன்று சர்வாங்க அபிஷேகம் திருக்கல்யாணம்பஞ்ச மூர்த்திகள் வீதி உற்சவம் நடைபெறும்.ஆடிப்பூர நட்சத்திரத்தன்று சுந்தரபெருமானுக்கு உற்சவம் நடைபெறும்.

### ஆவணி:

ஆவணி மூல நட்சத்திரத்தன்று மலை மீது உள்ள சுவாமிக்கு விழா நடைபெறும் இறைவன் பிட்டுக்கு மண்சுமந்த படலம் நினைவாக நடைபெறும். இறைவன் ஆமை மண்டபத்தில் வைத்து அபிஷேகம் செய்யப்படும். தாழக்கோயிலில் சோமாஸ்கந்த மூர்த்தியே உற்சவ மூர்த்தியாவார் ஆவணி சதுர்த்தி திதியில் வினாயகர் உற்சவம் நடைபெறும். வினாயகர் வீதி உலா நடைபெறும்.

### புரட்டாசி:

புரட்டாசி விழா மற்ற கோயில்களில் நடை பெறுவது போலவே மிக சிறப்பாக நடை பெறுகின்றது. பலவிதமான அலங்காரங்கள் அம்மனுக்கு செய்யப்படும். நவராத்திரி உற்சவம். 9 நாட்கள் அபிஷேக அலங்கார தூப தீப நைவேய்திய ஆராதனை. 9–ஆம் நாள் நவமி அன்று மூலஸ்தான அம்மனுக்கு சர்வாங்க அபிஷேகம் நடைபெறும் விஜய தசமி அன்று அம்மன் நால்வர்கோயில் பேட்டை அருகே உள்ள வன்னியடி வினாயகர் கோயில் அருகே சென்று மகிஷனை சம்ஹாரம் செய்வது போன்று வன்னிமரத்தை வெட்டி விட்டு வருவார்.

### ஐப்பசி:

ஸ்ரீமகா கந்த சஷ்டி உற்சவம் 6 நாட்கள் நடைபெறும். ஆறு நாட்களும் தாழக்கோயில் முருகனுக்கு அபிஷேக ஆராதனை உற்சவம் நடைபெறும்.

ஐப்பசி மாதம் அஸ்வினி நட்சத்திரம் அன்று ஸ்வாமிக்கு அன்னபிஷேகம் திருமலையிலும் தாழக்கோயிலிலும் உருத்திரான்கோயிலிலும் நடைபெறும். இறைவன் மீது சாற்றிய அன்னம் பிறகு பக்தர்களுக்கும் நீர்நிலைகளிலும் கரைக்கப்படும்.

### கார்த்திகை:

கார்த்திகை பரணி தீபம் சிறப்பாக நடைபெறும். பௌர்ணமியில் தீபேற்சவம். பஞ்ச மூர்த்திகள் வீதி உலா. இரவு சொக்கபனை நிகழ்ச்சி நடைபெறும் கார்திகை மாதம் கடைசி சோமவாரம் (திங்கள்கிழமை) மலைமேல் உள்ள வேதகிரீஸ்வரருக்கு மதியம் 1 மணிக்கு மேல் 1008 மஹா சங்காபிஷேகம் நடைபெறும்.

### மார்கழி:

ஸ்ரீ மாணிக்கவாசகர் 10 நாள் உற்சவம். கடைசி நாள் திருவாதிரையில் ஸ்ரீநடராஸ மூர்த்திக்கு மஹா அபிஷேகம்வீதி உலா உற்சவம் நடைபெறும் மார்கழி திருவாதிரையாகிய



ஆருத்ரா தரிசனம் சிதம்பரத்தில் நடைபெறுவதுபோல இங்கு நடை பெறுவது விஷேஷமாகும்.

**தை:**

பூச நட்சத்திரத்தில் சங்கு தீர்த்த குளத்தில் தெப்பல் உற்சவம் நடைபெறும். சந்திரசேகரர் அம்பாளுடன் சங்குதீர்த்த குளத்தினை மூன்று முறை வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாளிப்பார். மறுநாள் ரிஷப தீர்த்த குளத்தில் சந்திரசேகரர் அம்பாளுடன் வந்து குளத்தினை ஒன்பது முறை வலம் வந்து பக்தர்களுக்கு தரிசனம் தரும் தெப்பல் உற்சவம் நடைபெறும்.

**மாசி:**

மகம் நட்சத்திரத்தில் ஸ்வாமி சங்கு தீர்த்ததில் காலையில் தீர்த்தம். மாலையில் ரிஷப வாகன சேவை.

**பங்குனி:**

உத்திரம் நட்சத்திரத்தில் ஸ்ரீதிரிபுரசுந்தரி அம்மனுக்கு சர்வாங்க அபிஷேகம். திருக் கல்யாணம். ரிஷப வாகன சேவை நடைபெறும்.



வேலன்

**சிறப்பு அபிஷேகம்:**

ஆவணி அவிட்டம் முதல் கார்த்திகை மாத்திற்குள் திருமலையில் பவித்ரோற்சவம் வசதிக்கு ஏற்றபடி தோதான நாளில் செய்யப்படும்.

தாழக்கோயில் தினசரி காலை 6.00 மணிக்கு கோயில் திறந்து மதியம் 1.00 மணி வரையிலும் மாலை 4.00 மணிக்கு கோயில திறந்து இரவு 9.00 மணிக்கு நடை சாத்தப்படும். திருவிழா காலங்களில் உற்சவ காலங்களில் கோயில் திறக்கும் நேரம் மாறுபடும். மலைக்கோயில் காலை 8.30 க்கு திறந்து மதியம் 12.30 மணி வரையிலும் மாலை 4.30 மணிக்கு திறந்து இரவு 7.30 மணி வரையிலும் திறந்து இருக்கு.

– வேலன், போன்: 9894836096
திருக்கழுக்குன்றம்.

# திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரருக்கு 1008 மஹா சங்காபிஷேகம்



ஜலத்தில் அனைத்து தேவர்களும் தோன்றுவர் என்பது வேதவாக்கு. நீரின்றி அமையாது உலகு என்பது வள்ளுவர் வாக்கு. நீரிலிருந்து அனைத்து ஜீவராசிகளும் தோன்றியது. எனவே தான் எந்த இறைவன் வழிபாட்டிலும் அதன் அங்கமாக ஜலத்தனை பூஜித்து அதில் தேவதைகளை ஆவாஹனம் செய்து வணங்கி பூஜித்து பின்னர் அந்த ஜலத்தினை அபிஷேகம், ப்ராக்ஷானம், ப்ரசனம் போன்றவற்றிக்கு பயன்படுத்துகின்றார்கள்.

ஜலத்தினை நிரப்பி பூஜிக்கும் பாத்திரங்கள் கலசங்கள் அல்லது கும்பங்கள் எனப்படுகின்றன. கலசங்கள் – கும்பங்கள் மனிதர்களால் உருவாக்கப்படுகின்றன. ஆனால் சங்குகள் இயற்கையாக பிறக்கின்றது. இறைவனால்படைக்கப்படுகின்றது. அப்படி பிறந்த சங்குகள் இறைவன் வழிபாட்டின் போது கலசம்போலும் பூஜை சமயத்தில் மங்கல வாத்தியமாகவும் பயன்படுகின்றது.

சங்கில் நீரினை (ஜலத் தினை) நிரப்பி அதனை கொண்டுசிவபெருமானுக்கு அபிஷேகம் செய்வதே சங்காபிஷேகம் ஆகும். 1008 சங்குகளில் செய்வதால் 1008 மஹாசங்காபிஷேகம் எனப்படுகின்றது. அவ்வாறு செய்யப்படும் சங்காபிஷேகம் நமது திருக்கழுக்குன்றத்தில் மலைமீது உள்ள வேதகிரீஸ்வரருக்கு கார்த்திகை கடைசி சோம வாரத்தில் செய்யப்படுகின்றது. அதன்படி வருகின்ற 14.12.2020 திங்கள்கிழமை மதியம் 12 மணிக்கு மேல் மலைமீது அமர்ந்துள்ள சிவ பெருமானுக்கு 1008 மஹாசங்காபிஷேகம் நடைபெற உள்ளது.



இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க
aanmeegamalar.com
இணையதளத்தை பார்க்கவும்











# விதி என்னும் சிறையிலிருந்து சிறை மீறிய ஒருவராய் இருங்கள்

அன்பு குருதேவர் அருளுகிறார்: “வாழ்க்கை ஏறுமாறாக நிச்சயமற்றதாக மற்றும் எல்லாவிதத் தொல்லைகள் நிறைந்ததாக தோன்றினாலும், நாம் எப்பொழுதும் இறைவனின், வழிகாட்டுகின்ற அன்புப் பாதுகாப்பின் கீழ் இருக்கிறோம். நமது தவறான செயல்களின் விளைவுகளால் சிறை பிடிக்கப்பட்டு, நாம் ஒரு விதமான சிறையில் இருக்கிறோம். ஆனால் நாம் இந்த சிறையிலிருந்து தப்பித்து இறைவனுடன் மீண்டும் ஒன்றுபட்டு இருக்க முடியும். நாம் விதியின் சிறைக்கம்பிகளால் தீமை, நல்லொழுக்கப் பிரச்சனைகள், பலவீனங்கள், நோய், நிதிப்பிரச்சனைகள் சூழப்பட்டிருந்தாலும் நாம் நம் அகத்தே அவற்றைத் துண்டிக்கும் சக்தியைப் பெற்றிருக்கிறோம்.”

“உங்கள் இளமைக் காலத்தில், உலகத்தை வெல்லும் சக்தியை பெற்றிருப்பதாக உணர்ந்தாலும், நீங்கள் வயதாக வயதாக அதை இழந்துவிட்டதாக உணர்கிறீர்கள். நாள்தோறும் நீங்கள் உங்கள் சுற்றுப்புறம் மற்றும் பழக்கங்களின் ஓர் அடிமை என்று நிரூபிக்கிறீர்கள். அதற்குப் பதிலாக ஒவ்வொரு நாளும் நீங்கள், “நான் எல்லாவற்றையும் வென்றவன். நான் இறக்கலாம். ஆனால் நான் இறைவனின் மார்பில் சுதந்திரமாக இறப்பேன். நான் விதியின் சிறைக்கம்பிகளாகிய தீயப்பழக்கங்களின் சிறைக்கம்பிகளுக்குப் பின்னால் தங்கியிருக்க மாட்டேன்” என்று அவசியம் சங்கல்பிக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் நீங்கள் தியானித்து உங்கள் இச்சாசக்தியை வலிமைப்படுத்தினால் இத்த சுதநிதரம் வரும். இறைவனில்லை, நீங்கள்தான் சிறையை உருவாக்கினீர்கள். நீங்கள்தான் அந்தச் சிறைகம்பிகளை உருவாக்கினீர்கள். எனவே நீங்கள்தான் அவற்றை உடைக்க வேண்டும். நீங்கள் சிறை மீறியவர்களாக இந்த உடலெனும் சிறையை உடைத்துக்கொண்டு வெளிவருபவர்களாக இருக்கவேண்டும். தீய பழக்கங்கள், பற்றுடைமை, உணர்ச்சி வசப்படல், ஆசைகள், வாழ்வு, சாவு ஆகிய ஒவ்வொரு சிறைக்கூடத்திலிருந்தும் தப்பித்துக்கொள்ளுங்கள் உங்கள் ஆன்மா சிறைபட்டிருக்கும் இந்தச் சிறையின் சிறைக்கம்பிகள் ஞானம் என்னும் ரம்பத்தின் துணைகொண்டு துண்டிக்கப்பட முடியும். தியானத்தில் எவ்வளவு அதிகம் நீங்கள் அவற்றை அறுக்கிறீர்களோ அவ்வளவு அதிகம் இறைவனின் சக்தி மூலம் நீங்கள் சுதந்திரமாவீர்கள். இறைவனில் இந்த வாழ்க்கை ஒரு கனவு போன்றது என்பதை நீங்கள் அறிவீர்கள் இது வெறும் ஒரு நாடகமே.”



அன்பு மிக்க குருதேவர் தொடருகிறார்: “அன்புக்குரியர்களே, உங்களுடனான இந்தச் சந்திப்புகளை நான் மிகவும் துய்த்து மகிழ்கிறேன். ஏனெனில் நான் ஓர் உரை நிகழ்த்த இங்கு வரவில்லை. நான் உங்களிடம் மெய்ப்பொருளின் உணர்வு நிலையுடன் பேசுகிறேன். இயந்திரத்தனமான விதத்தில் அல்ல. எனது ஆன்மாவிலிருந்து எழுகின்றதை நான் உங்களிடம் பேசுகிறேன். இறைவனைக் காண்பதில் ஆழமாக ஆர்வம் உள்ளவர்களை மட்டும் நான் நாடுகிறேன். அத்தகைய அற்புதமான ஆன்மாக்களை நான் இங்கு சந்திக்கிறேன். அத்தகைய அற்புதமான ஆத்மாக்கள் இங்கே நமது மௌண்ட் வாஷிங்டன் ஆசிரமத்தில் வாழ்கின்றனர். வருடங்கள் வருடங்களாக ஓர் அமைதி மற்றும் இணக்கம். நான் இறைவனுக்கு அவனது எல்லா மகிமைக்காக நன்றி கூறுகிறேன்.”

“நல்லது செய்வது என்பது எப்பொழுதுமே எளிதல்ல. ஆனால் வாழ்க்கையில் மிகப்பெரிய விஷயம் என்பது உங்கள் சொந்த தூய மனச்சாட்சியின் கோட்டையில் இருந்துகொண்டு இறைவள நீங்கள் மகிழ்விக்கிறீர்கள் என்று அறிந்தவண்ணம் வாழ்வதாகும். இறைவன்தான் ஒரே விடை; ஏனெனில் மிகப்பெரிய ஆனந்தம் இறைவனுள் உள்ளது. “என்னில் சரணடைந்து எல்லாக் கர்மங்களையும் உண்மையாகச் செய்துகொண்டிருப்பவன் எனதருளால் சாசுவதமான, நிலையான வீடுபேற்றை அடைகிறான் என்று பகவான் கிருஷ்ணன் பகவத் கீதையில் அருளுகிறார். (பகவத் கீதை அத்.18 ஸ்லோகம் 56) நீங்கள் அனைவரையும் நேசித்து, வாழ்த்தி, ஒவ்வொருவர் உள்ளும், தவறிழைப்பவருள்ளும் இறைவனைக் காண முயலவேண்டும். சில சமயங்களில் அது எவ்வளவு கடினமாகத் தோன்றினாலும் சரி, நீங்கள் சத்தியத்தின் பாதையை கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும். அப்பொழுது விதியின் சிறைக்கம்பிகளை நீங்கள் தகர்ப்பீர்கள்,” என்று குருதேவர் கூறுகிறார்.

“விதி என்னும் சிறையிலிருந்து சிறை மீறிய ஒருவராய் இருங்கள்” என்று குருதேவர் போதிக்கிறார் ஒருவர் இதுபோன்ற மனதுடன்

95
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு
மேம்படுவதற்காக


ஆன்மிகமலர் மெயில் புக்

www.aanmeegamalar.com

மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில் இலவசமாக
டவுன்லோடு செய்தும் படிக்கலாம்




வாழவேண்டுமென்றால், அதற்கான ஒரு அறிவுரையை பகவத் கீதையில் பகவான் கிருஷ்ணன் அருளுகிறார்:


குருப்ரியா

மய்யேவ மன ஆதத்ஸ்வ
மயி புத்திம் நிவேசய
நிவஸிஷ்யஸி மய்யேவ அத
ஊர்த்வம் ந ஸம்சய:

“ஒருவர் தன் மனதையும் புத்தியையும் முழுமையாக இறைவனிடத்தில் அர்ப் பணம் செய்தால் அவன் இறைவனில்தான் வசிக்கிறான் என்றுதான் கூறவேண்டும். ஆசைகளும் சங்கல்பங்களும்தான் உள்மனதின் முக்கிய விஷயங்கள். ஆசைகள் புத்தியுடையதும் சங்கல்பங்கள் மனதினு டையதுமாகிறது. அவற்றை வைத்துதான் ஸகல சம்சார வியாபாரங்களும் நடக்கச் செய்கின்றன. அனைத்து ஆசை களும் அனைத்து சங்கல்பங்களும் இறைவ னைச் சம்பத்தப்படுத்தியுள்ளதாக மட்டுமாகும்பொழுது பின்னர் சம்சார வியாபாரம் அடங்கித்தான் ஆக வேண்டும். மனைதயும் புத்தியையும் முழுமையாக இறைவனிடத்தில் அர்ப்பணம் செய்கின்ற ஒருவன் சம்சாரத்தில் அல்லாமல் சச்சிதானந்தஸ்வரூபனாகிய இறைவனிடத்தில்தான் வசிக்கிறான் என்பதுதான் பொருள்; அதுதான் உண்மை. ஆனால் அவ்வாறான மாற்றம் கிடைக்கப்பெறுவது என்றால் அது அவ்வளவு சுலபமல்ல. சம்சாரத்தில் எதாவது ஒரு விஷயத்தில் சிறிதளவாவது ஆசையோ சங்கல்பமோ இருக்கும் வரையில் மேலே கூறிய நிலையை எய்த முடியாது. அதற்கு மிக முக்கியமான விஷயம் ஒன்று வேண்டும். அது என்னவென்றால் சகல ஆசைகளும் சங்கல்பங்களும் அடங்கத்தகுந்ததான இறைப் பிரேமைமிகுந்த அளவில் கொழுந்துவிட வேண்டும். தீவிர வைராக்கியத்தால் மனம் புத்தி சித்தம் இவை சம்சாரத்திலிருந்து நிவர்த்தியாகவேண்டும். எந்த விதத்திலும் கடமையைச் செய்ய வேண்டும் என்றோ அதன் பலனை அனுபவிக்க வேண்டும் என்றோ உள்ள மனப்பான்மை இல்லாமலிருக்க வேண்டும். இந்த நிலை கைவந்தால் மட்டும்தான் மனமும் புத்தியும் சம்சாரத்திலிருந்தாலும் அவற்றிற்கு எந்த பணியும் இல்லாமலாகி எப்பொழுதும் இறைவனிடத்திலேயே இருந்து கொண்டு அவனையே காதலிக்க ஆரம்பிக்கிறது. களங்கமற்றதும் நிபந்தனையற்றதுமான பகவத் பிரேமை வளர்ந்து கொண்டிருக்கும். பின்னர் காலத்தில் மேலே கூறிய நிலையை அந்த பக்தனால் அடைய முடியும். சித்தத்திற்கு ஆனந்த ஸ்வரூபனான இறைவனிடத்தில் லயிப்பதுதான் சமாதிநிலை. இடைவிடாமல் எப்பொழுதும் அந்த நிலை கைவரப்பெற்றால் ஜீவன்முக்தி என்றும் சகஜ சமாதி என்றும் சாத்திரங்கள் கூறுகின்றன. ஆத்ம ஸம்ஸ்காரத்தின் மிகப்பெரிய உயர்ந்த நிலைதான் அது. அந்த அனுபூதியில் வாழுகின்ற ஒரு மனிதனின் கண்களுக்கு இந்த உலகம் கேவலம் கனவு மட்டும்தான். உலகத்தில் என்ன நிகழ்ந்தாலும் அவை கனவில் நிகழ்பவை போன்ற எண்ணமல்லாமல் வேறு ஏதும் இல்லை. ஒரு மனிதனுக்கு களங்கமற்ற பக்தி இறைவனிடத்தில் வளரும்பொழுது, அல்லது இறைவனிடத்தில் அளவற்ற பிரேமை வளரும்பொழுது மேற்படி நிலையை அடைவான். (பகவத் கீதை அத்.12 ஸ்லோகம்.8)

விதி என்பது என்னவென்றால் நம் வினையே நமக்கு விதியாக மாறுகிறது. அவ்வாறு நம் செயலே நமக்கு விதியாக மாற வேண்டாம் என்று நினைத்தால் செயல்களைத் தேர்ந்தெடுத்துச் செய்ய வேண்டும். அப்படியென்றால் நாம் செய்யும் செயல்கள் பிறருக்கு நற்பயனை அளிப்பதாக இருக்க வேண்டும். பிறர் பயனடைய வேண்டும் என்ற எண்ணத்துடன் இருக்க வேண்டும். அதில் எந்த பிரதிபலனையும் எதிர்பார்க்காமலிருக்கவேண்டும். பிரதிபலனை எதிர்பாராமல் செய்பவை நல்வினையானாலும் நம்மைச் சேராது. அவை தீவினையானால் நம்மைத்தான் சேரும். தீவினை எப்பொழுதும் தீமையைத்தான் விளைவிக்கும். பலனை எதிர்பாராமல் செய்யும் கர்மங்கள் யார் செய்வார்கள் என்றால், இறைவனிடத்தில் சரணடைந்த இறைவனை நேசிக்கின்ற ஓர் உண்மையான பக்தன்தான். எனெனில் அந்த பக்தன் இறைவனிடத்தில் தன்னையும் தனக்குரிய அனைத்தையும் ஒப்படைத்துவிட்டான். அதனால் எல்லா பொறுப்பும் இறைவனையே சாரும். அதனால் அந்த பக்தன் விதியிலிருந்து விலக்கப்பட்டவனாகிறான்; அவன் சுதந்திரனாகிறான். அவன் கர்மங்கள் செய்தாலும் செய்யாதவன் போன்றுதான் இருப்பான் அனைத்தும் இறைவனிடம் சென்று விடும். ஏனெனில் அவன் பலனை எதிர்பார்க்கவில்லை. மாறாக, பலனை எதிர்பார்க்கின்றவனுக்கு அவன் செய்கின்ற அனைத்து கர்மங்களின் பலனும் அவனை வந்து சேருகிறது. அனைத்திலும் இறைவன்; அனைத்தும் இறைவனுள் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டால் எல்லாம் புரியும். இவ்வாறு எங்கும் நிறைந்து விளங்குகின்ற இறைவன் ஒரு நாள் ஒருவனில் வெளிப்படும். இவ்வளவு நெருக்கத்திலிருக்கின்ற இறைவனை மனிதனுக்குத் தெரியவில்லை. தெரியவேண்டும் என்ற எண்ணமும் அவனுக்கு வரவில்லை. இறைவனைத் தெரிந்து கொண்டால் பாதுகாப்பு உண்டு என்பதையும் அறியவில்லை. இறைவன்தான் இந்த முழுபிரபஞ்சத்திற்கும் பாதுகாப்பு. இறைவனை அடைய வேண்டும் என்ற வைராக்கியத்துடன் வாழும் ஒரு பக்தன் பிறருக்கு எந்த விதத்திலும் மனம், வாக்கு, செயல் இவற்றினால் பாதகம் அல்லது தீமை விளைவிக்காமலிருப்பான். அப்படிப்பட்ட வன் பரிசுத்தமான கர்மங்கள் மட்டும் தான் செய்வான். எப்படிப்பட்ட கர்மங்களும் தீமையை உருவாக்குவதுதான். இறை அனுபூதிக்குத் தடையாகின்ற எந்த விதத்திலுள்ள கர்மங்களும் தோஷத்தை உருவாக்குகிறது. எந்தக் கர்மமானாலும் பலனை எதிர்பாராமலுள்ளதாக இருக்க வேண்டும். அனைத்தையும் இறைவனை மையமாக்கிக் கொண்டு செய்யவேண்டும் அல்லது இறைவனை சம்பந்தப்படுத்தியவாறு செய்யவேண்டும். அதுதான் ஓர் உண்மையான இறை பக்தனின் அடையாளம். அவன் இறைவனை ஆழமாக நேசிப்பான். அப்படிப்பட்ட மனப்பான்மையுடையவன் இறைவனை அடைய வேண்டும் என்ற நோக்கத்துடனும் ஏக்கத்துடனும் வாழுவான். ஆனால் யார் தன்னை ஆழமாக நேசிக்கிறான்; ஆழமாக அன்பு செலுத்துகிறான்; யார் தன்னிடத்தில் ஆழமான பற்றும் பாசமும் வைத்திருக்கிறான் என்பதை இறைவன் அறிவான். அதற்கேற்ப அப்படிப்பட்டவர்களுக்கு இறைவன் தன்னுடைய பாதுகாப்பை அருளுவான். இது உண்மை. அவனுடைய பாதுகாப்பு இல்லையெனில் இவ்வுலகில் பயந்து வாழும் நிலைதான். இப்பொழுது அவ்வாறுதான் இருக்கிறது. இறைவனின் பாதுகாப்பு உள்ளவர்களுக்கு எவ்வித பயமும் இல்லை. பொதுவாக, சம்சாரம் ஒரு பெரிய சிறை. எல்லாவற்றிற்கும் மேலாக இறைவன் இந்த முழுப்பிரபஞ் சத்திற்கும் பாதுகாப்பாக இருக்கும்பொழுது இந்த லௌகீக உலகச் சிறையிலிருந்து விடுபட்டு, அனைத்திற்கும் மேலாக இறைவன் அனைத்திலும் மையமாகக் கொண்டிருப்பதை உணர்ந்து அவனிடத்தில் சரணடைந்து இந்த லௌகீக வாழ்க்கையில் வினாடிக்கு வினாடி ஏற்படுகின்ற கர்மவினைகளிலிருந்து அல்லது விதிகளாகின்ற சிறையிலிருந்து மீறி வெளியேறி இறைவனிடத்தில் அடைக்கலமாகிறவன் எவனோ அவனே சிறை மீறிய ஒருவராக இருப்பான். அதற்கு இறைவனை தியானத்தால் அறிந்துணர்ந்தால் மட்டும்தான் அவ்வாறு செய்ய இயலும்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி) சர்பதிவாளர் (ஓய்வு)
Cell No.9894595909

# கோமாதா எங்கள் குலமாதா

மாதா, பிதா, குரு, தெய்வம் என்று பெரியோர் கூறுவர்.

அனைத்திற்கும் பிரதானமாக விளங்குபவள் அன்னை. இறைவனே ஆனாலும் அன்னைக்கு தான் முதலிடம். ஸ்ரீ ராமரும் ஸ்ரீ கிருஷ்ணரும் அன்னையை போஷித்தது போல் வேறு எவரும் இலர்.

கோசலை ராமன், யசோதா கிருஷ்ணன் என்று அன்னையை முன்னிலைப்படுத்திதான் ராம கிருஷ்ணரை அழைப்பர். ஒரு க்ஷண பொழுதில் அன்னையின் வார்த்தைக்காக பாரம்பரியமான சூர்ய வம்ச அரியாசனத்தையே தூக்கி எறிந்த பெருந்தகை ஸ்ரீ ராமபிரான்.

ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதர் அன்னையின் அருமையை உலகிற்கு உணர்த்தியதுதான் மாத்ரு பஞ்சகம்.

இந்த உலகில் மிகவும் புனிதமானதாக கருதப்படுவது: மாதா பிதா, குரு, கங்கை, பசு, அந்தணர், சூரியன், அக்னி, யாகம், கீதை, காயத்ரி, சர்வேஸ்வரனாகிய ஈஸ்வரன்.

இறைவன் மனிதனாய், ரிஷியாய், தேவதையாய், அந்தணராய் நம் அற்பமாக நினைக்கும் விலங்காய் இவ்வளவு ஏன் புழு, பூச்சிகளாய் இருந்து சர்வாண்டம் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருள். இதற்கு ஸ்ரீ கிருஷ்ணரின் விஸ்வரூப தரிசனமே சாக்ஷி.

அனைத்து ஜீவராசிகளிலும் இறைவன் உறைவதால் நாம் அனைத்து விலங்கினங்களையும் ஈஸ்வர ஸ்வரூபமாக பார்க்கிறோம். உதாரணமாக,

| | |
|---|---|
| விஷ்ணு ரூபம்: | மத்ஸ்யம் (அ) மீன், கூர்மம், வராஹம், சிங்கம், குதிரை, பசு. |
| ஈஸ்வர ரூபம்: | காளை, நாய் |
| ப்ரம்ம ரூபம்: | கரடி |
| ஹனுமந்த ரூபம்: | வானரம் |
| விக்னேஸ்வர ரூபம்: | யானை |
| குமாரஸ்வாமி ரூபம்: | மயில், சேவல் |

இதில் ஒரு சிறப்பு என்னவென்றால், எந்த ஒரு விலங்கினத்திற்கும் கிடைக்காத மிகப் பெரும் புனிதமான பெருமை பசுவிற்கு மட்டுமே உண்டு. ஏனென்றால் நாம் பசுவை மட்டும்தான் "மாதா" என்ற தாய்மையுணர்வோடு "கோமாதா" என்று கூறுகிறோம். அன்னையைப்போன்று தன்னுடைய உதிரத்தை பாலாக்கி வழங்குவதினால் பசு அன்னையாக மதிக்கப்படுகிறது. தாய்ப்பாலிற்கு நிகரான புனிதமும், சக்திக்கும் சற்றும் குறைந்ததில்லை பசுவின் பால். அவ்வளவு சத்தும், மகத்துவமும் நிறைந்தது.

கோமாதாவை 'காமதேனு' என்று இறைத் தன்மையுடன் வணங்குகிறோம்.

மற்றொரு சிறப்பம்சம் பசுவிற்கு உண்டு அது நமக்கு சற்று ஆச்சர்யத்தை தரும். தன்னை அறியாமல் பசு விஷத்தை உண்டுவிட்டாலும் அதன் பால் என்றும் விஷத்தன்மை ஆவதில்லை. தன்னுடைய கண்டப்பகுதியில் விஷத்தை சேமித்துவைக்கும் வல்லமை உடையது.

ஆலகாலம் என்னும் கொடிய விஷத்தை லோக க்ஷேமத்திற்காக தான் அருந்தி, பரமேஸ்வரியின் க்ருபையால் கண்டத்தில் நிறுத்திய பரமேஸ்வரனை நமக்கு நினைவுபடுத்துகிறது இல்லயா? ஆதலால்தான் நாம் பசுவை கடவுளாக பாவிக்கிறோம். என்னவொரு அதியசம் நமது கற்பனைக்கும் விஞ்ஞானத்திற்கும் எட்டாத ரஹஸ்யம். ஆதலால்தான் பசுவிற்கு நாம் அகத்திக்கீரையை வழங்குகிறோம் ஏனென்றால் அது விஷத்தை முறிக்கும் தன்மை உடையது. பசுவிற்கு இறைத் தன்மையை அளித்து காமதேனு என்று நாம் வணங்குகிறோம்.



பசுவிற்கு ஒரு விசேஷ தனித்தன்மை உண்டு. மேய்ச்சலில் இருக்கும்பொழுது தன்னுடைய எஜமானனை ஒரு கண்ணால் கவனித்தவாறு மேயும் தன்மையுடையது.

வேத காலத்தில் பசுவின் மூலம்பெறப்பட்ட பால் போன்ற பொருட்கள் அதீத முக்கியத் துவம் பெற்றிருந்தன. யாகங்களின் போது பிராமணர்களுக்கு பசுவை தானமாக அளித்துள்ளனர்.

கோமாதாவின் தேகத்தில் சகல தேவதா மூர்த்தங்களும், முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்து எண்ணாயிரம் ரிஷிகளும், அஷ்டவசுக்களும், நவக்கிரகங்களும், நவநிதிகளும், மும் மூர்த்திகளும், முப்பெரும் தேவியரும் குறிப்பாக ப்ருஷ்ட பாகத்தில் லோக மாதாவான ஸ்ரீ மஹாலக்ஷ்மி உறைவதால் மிகவும் புனிதமான ஒன்றாக கருதப்படுகிறது. பசுவை ஒருமுறை ப்ரதக்ஷிணம் செய்வதால் சகல லோகங்களையும் அண்ட சராசரங்களையும் சுற்றிய பலன் கிடைக்கும்.

கோகுலத்தில் ஸ்ரீ கிருஷ்ணர் ஆநிரைகளை மேய்த்து பசுவிற்கு யாரும் கொடுக்காத ஓர் அங்கீகாரத்தை வழங்கினார். பசு மஹாலக்ஷ்மியின் ஸ்வரூபமானதால் அவர் எப்பொழுதும் அதனுடனேயே இருந்தார். ஆதலால்தான் ஸ்ரீ கோபால கிருஷ்ணர் என்று பசுவை முன்னிறுத்தி அழைக்கிறோம். பசு ஸ்ரீ கிருஷ்ணருக்கு மிகவும் ப்ரீதியானது. பசுவை வணங்குவதன் மூலம் நாம் ஸ்ரீ கிருஷ்ணரின் பரிபூர்ண கடாக்ஷத்தை மிகவும் எளிதாக பெறலாம்.

ஸ்ரீ கிருஷ்ணரின் நித்ய வாசஸ்தலம் கோலோகமாகும்.

அனைத்து பெருமாள் திருத்தலங்களிலும் பெருமாளின் முதல் தரிசனம் கோதரிசனம்தான் குறிப்பாக 108 திவ்ய தேசங்களில் ஒன்றான உப்பிலியப்பன் கோயிலில் பெருமாளின் முதல் தரிசனம் கோமாதா தரிசனம் தான். அச்சமயத்தில் உப்பிலியப்பனை தரிசனம் செய்வது அதிவிசேஷம். இவர் திருப்பதி பெருமாளின் ஜேஷ்டனாக கருதப்படுகிறார் ஆதலால்தான் திருப்பதியில் வேண்டுதல் செய்ய முடியாது போனால் நாம் உப்பிலியப்பன் கோயிலில் நமது வேண்டுதலை நிறைவேற்றலாம்.

நாம் கூட புதுமனை புது விழாவில் (கிருஹ ப்ரவேசத்தில்) முதன் முதலில் கோமாதாவை அழைத்து


ஆன்மிகமலர் மெயில் புக்

www.aanmeegamalar.com



எஸ்.ரகுராமன்

பூஜை செய்வது ஏனென்றால் ஸ்ரீ மஹா லக்ஷ்மி கடாக்ஷம் அந்த புத்தம் புதிய வீட்டில் கிடைப்பதற்குத்தான்.

தானங்களில் சிறந்தது அன்ன தானமும் கோதானமும்தான். ஒருவன் எப்பேர்ப்பட்ட பாவங்கள் செய்திருப் பினும் கோதானம் செய்வத னால் அவ னுடைய பாவத்தின் அளவு குறையும்.

‘கோபிஸ்துல்யம் ந
பச்யாமி தநம் கிஞ்சித்’

பகவத் கீதையின் 10 ஆவது அத்யாயமான விபூதி யோகத்தில் ஸ்ரீ கிருஷ்ணர்:

ஆயுதாநாமஹம் வஜ்ரம்
தேநூநாமஸ்மி காமதுக்
ப்ரஜநஷ்சாஸ்மி கந்தர்ப:
ஸர்பாணாமஸ்மி வாஸுகி: 10.28

ஆயுதங்களில் வஜ்ராயுதம், பசுக்களில் காமதேனு, உயிர்களை பிறப்பிக்கின்ற மன்மதனாக இருக்கின் றேன். சர்ப்பங்களில் வாசுகியாக இருக்கின்றேன் என்கிறார்.

பசு மற்றும் துளசியின் அருகில் செய்யும் பூஜை, ஜபம், த்யானம் அளப்பரிய சித்திகளையும், பன்மடங்கு பலன்களையும் மற்றும் லட்சுமி கடாக்ஷத்தையும் அளிக்கும். துஷ்ட சக்திகள், எமவாதை, கலி உபாதை கோமாதா இருக்கும் இடத்தில் நெருங்காது.

கோமாதா பற்றி கருட புராணத்திலும், விஷ்ணு புராணத்திலும், கூறப்பட்டுள்ளது.

பசுவதை மாபாதகமானது என்று வேதமும், சாணக்கியரின் அர்த்தசாஸ்திரம், மனு ஸ்மிருதி பகர்கிறது.

கோமாதா பூமா தேவியின் அம்சம்.

வருடத்திற்கு ஒரு முறையாவது நாம் அனை வரும் கோமாதா பூஜை தத்தமது இல்லங்களில் நடத்த வேண்டும்.

பசுவின் கால் தூசி நம்மீது பட்டால் அது கங்கையின் நீராடலுக்கு சமம் என்று புராணங்கள் தெரிவிக்கின்றன.

கலியுக சர்வேஸ்வரனான ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளான "மஹா பெரியவா" கோ தானத்தையும், கோசாலா பராமரிப்பு பற்றியும் தமது "தெய்வத்தின் குரல்" என்னும் நூலில் மிக விஸ்தாரமாக கூறியுள்ளார்.

பித்ரு பூஜையின் போது கோதானம் அதி விசே ஷம். குறிப்பாக கன்றுடன் கூடிய கோதானம், கோபூஜை பரம பவித்ரம்.

பசுவின் பாத தூளியை கீர்த்திமிகு சூரிய குலத்தோன்றல்களான ரகு, அஜன், தசரத சக்ரவர்த்தி தத்தமது சிரசில் தரித்தார்கள்.

கோபூஜை செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமை களில் செய்வது உத்தமம்.

பசுவினில் ரிக் வேதம் பின்புறமும், யஜுர் வேதம் நடுவினிலும், சாம வேதம் கழுத்துப்பகுதியிலும் உள்ளது.

சூரிய வம்ச குல குருவான வசிஷ்ட மகரிஷி ஆஸ்ரமத்தில் காமதேனு என் னும் தெய்வீக பசு இருந்தது.

லலிதா சஹஸ்ரநாமத்தில் 605ஆவதுதிருநாமம் கோமாத்ரே நம!! கோமாதாவாகிய அன்னையைப் போல் விளங்குபவள் என்று அர்த்தம்.

மஹாபாரதத்தில் அநுசாஸனிக பர்வத்தில் பீஷ்மர் ஸகல தர்மங்களையும் தர்மபுத்ரருக்கு உபதேசிக்கும்போது கோஸம்ரக்ஷணத்தையும் சொல்லி கோ மஹிமையை எடுத்துக் கூறுகிறார்.

நேபாளத்தில் பசுவை தேசிய விலங்காக அறி வித்து கௌரவப்படுத்தியுள்ளது.

பசுவிடமிருந்து கிடைக்கப்பெறும் அனைத்தும் மிகச் சிறந்த மருத்துவ குணங்கள் உடையவை (பால், தயிர், வெண்ணெய், நெய், கோமியம், சாணம்). இதனை பஞ்சகவ்யம் என்று கூறுவர்.

ம்ருத்யு/எமன் பசுவின் கண்களுக்கு தெரியும் ஒரு அபூர்வ சக்தி உள்ளது.

பசுவின் சாணத்தினால் வீடு மெழுகினால் அது சிறந்த கிருமி நாசினியாகவும், மருத்துவ குணமுள்ளதாகவும் விளங்குகிறது.

ஆதிகுருவாகிய தத்தாத்ரேயரும், கலியுக குருவாகிய ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகளின் படத்தில் காமதேனுவுடன் வீற்றிருப்பர். அதன் தாத்பர்யம் காமதேனுவை போன்று கேட்பதை அள்ளித்தருவதால்தான் என்பதை உணர்த்தத்தான். ஏனென் றால் கற்பகவிருக்ஷம் போல் அள்ளித் தருபவள் கோமாதா.

வியாதி, பித்ரு சாபம், ப்ரஹ்மஹத்தி தோஷம் போன்றவற்றை கோபூஜை நீக்குகிறது.

'கவாம் அங்கேஷூ திஷ்டந்தி புவநாநி சதுர்தச' என்பது புராண வாக்கு. அதாவது, பசுவின் அங்கங்களில் ஈரேழு பதினான்கு உலகங்களும் அடங்கியிருக்கின்றனவாம்!



திருமணம், குழந்தை பாக்கியம் தருவது கோமாதா பூஜையாகும்.

கோலோகநாம்னி நிஜதாம்னி தலேச தஸ்ய தேவிமஹேசஹரிதாமஸு தேஷு தேஷு தே தே ப்ரபாவநிசயா விஹிதாஸ் ச யேன கோவிந்தம் ஆதிபுருஷம் தமஹம் பஜாமி!!

(தேவிதாமம் என்ற இருப்பிடம் அனைத்து உலகங்களிலும் மிகமிகத் தாழ்மையான உலகம் அதற்கு சற்றுமேலாக மஹேச தாமம் என்ற சிவ லோகம் அதற்கு மேலாக ஹரிதாமம் என்ற வைகுந்தலோகம் எல்லாவற்றுக்கும் சிகரமாய் கோ லோகம் அது பகவான் கிருஷ்ணின் வசிப்பிடம்)

"ஸ்வாகதம்,ஸ்வாகதம், கோமாதா ஸ்வாகதம்,
ஸ்வாகதம், மகாலஷ்சுமி ஸ்வாகதம்,
ஸ்வாகதம், அஷ்டலஷ்மி"

“காமதேநேர: ஸமுத் பூதே ஸர்வதாம பலப்ரதே
த்யாயாமி ஸௌரபேயி த்வாம் வ்ருஷபத்னி
நமோஸ்துதே”

ரட்சமாம் ரட்சமே கேஹம் ரட்சமே புத்ர
பௌத்ரகான்

ரட்ச கோஷ்டம் ரட்ச பசூன் குருதேனூ:
பயஸ்விநீ:

அனயா பூஜயா இந்த்ர: ப்ரீயதாம்
காமதேனுப்ரீயதாம்||

❖❖❖

காம் ச த்ருஷ்ட்வா நமஸ்க்ருத்ய
க்ருத்வா சைவ ப்ரதக்ஷிணம்
ப்ரதக்ஷிணீக்ருதா தேன ஸப்தத்வீபா வஸுந்தரா

❖❖❖

“ஓம் சர்வ காமதுகே தேவி சர்வ தீர்த்தாபிஷேசி நீ
பாவநீ சுரபி ஸ்ரேஷ்ட தேவி துப்யம்
நமோஸ்துதே”!

❖❖❖

நிவிஷ்டம் கோகுலம் யத்ர ச்வாஸம்
முஞ்சதி நிர்பயம் !
விராஜயதி தம் தேசம் பாபம்
சாஸ்யாபகர்ஷதி !!

"எந்த தேசத்தில் பசுக்கள் தங்க ளுக்கு ஹிம்சை நேருமோ என்று பயப் படாமல் கோகுலங்களில் நிம்மதியாக மூச்சு விட்டுகொண்டு மகிழ்ச்சியாக இருக்கின்றனவோ அந்த தேசமே எல்லா பாபங்களும் விலகப் பெற்று பிரகாசமாக செழிப்புடன் விளங்கும்".

– எஸ்.ரகுராமன்

தொடர்பு எண்: 9940349593

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
புக் ஓர்க்,
அட்டைப்பட வடிவமைப்பு,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

ஆசிரியர், வெளியீட்டாளர்
C.N.ராஜா
செல்: 8825844033
♦♦♦
இணை ஆசிரியர்
செந்தில்நாதன்
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033



ஆசிரியர் குழுவில்
நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புவர்கள்ளும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033

ஒவ்வொருவரின் இமெயில் முகவரியை தேடி வரும் ஆன்மிக மாதமிருமுறை இதழ்

# இயற்கையும் கடவுளும் வேறு வேறல்ல

ஒரு மலரை உலகிலுள்ள நீ உதாரணமாக எடுத்துக்கொள். அது போல நீயும் உலகுக்கு நல்லவனாக ஆகி உபயோகப்பட்டு சமுதாயத்திற்கும் உனது சொந்தப் பரம்பரையின் உற்பத்திக்கும் உதவுவாய், உதவ வேண்டும்.

❖❖❖

அழகு என்பதை மலர்ந்த மலர்களுடன் ஒப்பிட்டு விளக்க வேண்டும். இதுபோல உலகில் ஒரு மனிதனையும் ஒரு பெண்ணையும் எப்படி விளக்குவாய்? இந்த மிகப்பெரிய கேள்வி நமக்கல்ல. கவிஞனுக்கே.

❖❖❖

வெறுமையாய் அர்த்தமில்லாமல் இறந்தோரின் சடலத்தின் மேலேயும் கடவுளின் கால்களிலும் மலர்களைப் பரப்புவதில் ஒருவித உண்மையும் தெளிவாவதில்லை. இந்த நிரந்தரமான யதார்த்தத்தின் உண்மைவிளக்கம் உலகில் இன்னும் சரியாகத் தெரியவில்லை. இறைவனது படைப்பை எப்படி உபயோகப்படுத்த வேண்டும் என்ற பொருளும் புரியவில்லை.

❖❖❖

எல்லா மொழிகளும் ஒரு உயர்ந்த நிலையைப் பெறவும் இருக் கின்றன, பெற்றும் விட்டன. அந்த பெற்ற நிலையும் பெறப்பட்ட நிலை அதனுக்கும் என்ன பெயர் இட்டிருக்கிறார்கள் தெரியுமா? மொழிகள் மலர்களைப் போன்று இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். ஆனால் எனது பாராட்டுதல்கள் இங்கு மொழிக்கு அல்ல. மலர்ந்த மலர்களுக்கே.

❖❖❖

ஒன்றினை ஆட்சி செய்கின்ற தத்துவம் என்பது இயற்கை யாவே உண்டு. அதன் பொருள் என்னவென்றால் பஞ்சபூதங்களின் குணமான இயற்கைத்தன்மையும் அந்த பஞ்சபூதங்களை ஆட்டிவைக் கும் கடவுளின் தன்மையும் நம்மை ஆட்டிப் படைக்கிறது என்பதே தத்துவம்.

❖❖❖

ஒரு இயற்கைத்தன்மை என்பது மற்றொரு இயற்கைத் தன்மையை ஆட்டிப்படைத்து கவனித்துக் கொள்ளுகின்ற இயக்கத் திற்கே இயற்கையின் இயக்கம் என்று பெயர். இதுவே உலகத்தின் இயற்கையிலிருந்து தோன்றியது.

❖❖❖

மேற்சொன்னதைப் போன்று நம்முடைய உடலின் இயக்கத்தையும் அதில் சிற்சில விஷயங்களை ஆட்சி செய்து ஆட்டிப்படைக்கின்ற தன்மைக்கு ஒரு செயல்வடிவம் உண்டு. அதற்கு தேகம் என்ற அமைப்பு என்று பெயர். இதுபோல அரசாங்கத்தை ஆட்சி செய்யும் முறைக்கு ஒரு சில நிரந்தர நடைமுறைச்சட்டங்கள் ஆட்சியின் வடிவ அமைப்பாக இருந்து கொண்டிருக்கிறது. இதற்கே ஆட்சிக்கு புஷ்டியை அளிக்கும் தன்மை என்று பெயர்.

❖❖❖

புஷ்டியாக இருக்கச் செய்வது என்பது ஒரு கலை. அதை கவனமாக வழிநடத்தி பார்த்துக் கொண்டிருப்பது என்பது அந்த தத்துவத்திலிருந்து தோன்றும் இயற்கையான வளர்ச்சியே. இத்தன்மை புஷ்டியாக இருப்பதற்கு இதில் தோன்றக்கூடிய கெட்ட தத்துவங்களைப் பிடுங்கி எடுத்துப் போட்டு விட வேண்டும். இதற்கே தத்துவத்திற்கு புஷ்டி ஊட்டுதல் என்று பெயர்.



ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# ஆயுளை வளர்க்கும் சித்திரை பௌர்ணமி

# அறிவை வளர்க்கும் வைகாசி பௌர்ணமி



## ஆயுளை வளர்க்கும் சித்திரை பௌர்ணமி

நமது இந்தியாவை பொறுத்தவரை பௌர்ணமி மற்றும் அமாவாசை தினங்களை புண்ணிய தினங்களாக கொண்டாடுவது வழக்கமாக இருக்கிறது. மந்திர பிரயோகங்கள் பித்ரு காரியங்கள் போன்றவைகளை செய்வதற்கு அமாவாசை உகந்த தினம் என்றால், சில நல்ல காரியங்களுக்கு பரிகாரங்கள் செய்ய பௌர்ணமி நல்ல தினமாகும். ஒவ்வொரு மாதத்திலும் வருகின்ற பௌர்ணமி தினத்தில் தனித்தனியாக செய்ய கூடிய பரிகாரங்களும், அதனால் கிடைக்கும் பலன்களும் ஏராளம். ஆனால் அது இதுவரை பலருக்கும் தெரியாத ரகசியமாகவே இருந்து வருகிறது.

சில விஷயங்களை ரகசியமாக பாதுகாப்பது சிறந்தது என்றாலும், பல விஷயங்களுக்கு அது பொருந்தி வராது. ரகசியம், ரகசியமென்று மூடி வைக்க வைக்க அது நாளா வட்டத்தில் அழிந்து போனாலும் போய்விடும். எனவே அப்படிப்பட்ட ரகசியங்களை மக்கள் பார்வைக்கு கொண்டுவர வேண்டியது கடமை என்று நினைக்கிறேன். அந்த வகையில் மாத வாரியாக வருகிற பௌர்ணமி தினங்களில் என்னென்ன பரிகாரங்கள் செய்யலாம் என்பதை தொடர் பதிவுகளாக தரலாம் என்று நினைக்கிறேன். அந்த வகையில் சித்திரை மாத பௌர்ணமியின் சிறப்புகளை இப்போது சிந்திப்போம்.

ஒரு மனிதன் நிறைய செல்வம் படைத்தவனாக இருக்கலாம். நல்ல பலசாலியாக, அழகு பொருந்தியவனாக, ஆரோக்கியம் மிகுந்தவனாக இருக்கலாம். இவைகள் எல்லாம் இருந்தும் அவனுக்கு ஆயுள்என்பது குறைவாக இருந்தால் அதனால் என்ன பயன் ? எனவே ஆயுள் என்பது மிகவும் அவசியம் சிலருக்கு நல்ல ஆயுள் இருந்தும் வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் இப்போது செத்துவிடுவோமோ? அப்போது இறந்துவிடுவோமோ? என்ற மரண பயம் இருந்து கொண்டே இருக்கும். மரணத்தை விட மிக கொடியது அதைபற்றிய பயம். அதனால் நீண்ட ஆயுள் பெறுவதற்கும் மரண பயம் இல்லாமல் வாழ்வதற்கும் சித்திரை மாதத்தில் விரதமும் பரிகாரமும் செய்து கொள்ளலாம்.

சத்தியவான் சாவித்திரியை பற்றி கேள்விபடாத ஹிந்துகளே இருக்க முடியாது எனலாம். மரண கோட்டைக்குள் சென்றுவிட்ட தனது கணவனை விடா முயற்சியாலும், நுண்ணிய புத்தியாலும் எமதர்மனையே சிந்திக்க வைத்து மீட்டு வந்தவள் அவள். அப்படி, அவள் கணவனின் உயிரை மீட்டு வந்த தினம் தான் இந்த சித்திரா பௌர்ணமி. இது மட்டும் இதன் விஷேசம் அல்ல, கால தேவனையே சிவபெருமானின் காலால் உதை வாங்க வைத்தானே அந்த மார்கண்டேயேன் எமதர்மனின் பாச வலையிலிருந்து மீண்டு வந்ததும் இந்த தினத்தில் தான்.

சித்திரா பௌர்ணமி அன்று, சித்திர குப்தனை அதாவது எமலோகத்தில் மனிதர்களின் ஆயுள் காலத்தை கணக்கிடுகிற தேவதையை நோக்கி விரதமிருக்க வேண்டும். அன்றைய உணவில் கண்டிப்பாக உப்பு இருக்க கூடாது. உப்பில்லாத உணவு சாப்பிடுவது தானே விரதம் அன்று ஒருநாள் மட்டும் கார வகை உணவுகளை தள்ளி வைத்து விட்டு இனிப்புகளை சாப்பிடலாம் என்று யாராவது நினைத்தால் அது மிகவும் தவறு. வழக்கமாக நாம் எடுத்து கொள்ளும் உணவையே உப்பில்லாமல் சமைத்து சாமிக்கு படைத்து அன்று உண்ண வேண்டும்.

அன்றைய தினம் திருவண்ணாமலை கோவிலில் இருக்கின்ற எமதர்மன் சன்னதியிலும், ஸ்ரீ வாஞ்சியம் சித்திர குப்தன் சன்னதியிலும், வழிபாடு செய்து ஏழை, எளியவர்களுக்கு நம்மால் முடிந்த தானங்களை செய்ய வேண்டும். மிக குறிப்பாக புற்று நோய் போன்ற, கொடிய நோய் ஏற்பட்ட வறியவர்களுக்கு முடிந்த மருத்துவ உதவிகளை செய்ய வேண்டும். இப்படி செய்வதனால் நமது ஆயுளும், கூடும் மரண பயமும் விலகும்.

## அறிவை வளர்க்கும் வைகாசி பௌர்ணமி

ஆடைகள் இல்லாமல், அம்மணமாக அலைவதை விட அறிவில்லாமல் வாழ்வது மிகவும் கேவலமாகும். இறைவனது படைப்பில் மற்ற உயிர்களை போல, மனிதனும் ஒரு மிருகமாகத்தான் படைக்கபட்டிருக்கிறான். ஆனாலும் அவனுக்கும் மிருகத்திற்கும் ஒரு சிறிய இடைவெளி இருக்கிறது என்றால், அது அறிவால் ஏற்பட்ட வளர்ச்சி என்று தான் சொல்ல வேண்டும். அதனால் தான் நமது முன்னோர்கள் உயிர் இயங்குவதற்கு எப்படி சுவாசம் அவசியமோ, அப்படியே அறிவும் அவசியமென்று என்று சொன்னார்கள்.

அறிவை வளர்த்து கொள்ள நாம் பலவகையிலும் பாடுபட்டு உழைக்கிறோம். தெளிவாக சொல்வது என்றால் ஒவ்வொரு நாளும் நமக்கு ஏற்படும் அனுபவங்கள் நமது அறிவை பட்டை தீட்டி கொண்டே செல்கிறது. காலம் வளர்வதை போல அறிவும் வளர்கிறது. மனித சமுதாயமும் வளர்கிறது. நாம் பல வகையாலும் அறிவை பெறுகிறோம். படிப்பது, கேட்பது உணர்வது என்று பல வழிகள், அறிவு வளர்ச்சிக்கு ஆதாரமாக இருக்கின்றன. இந்த வழிகளில் மிகவும் சிறந்தது இறைவழிபாடு என்பது.

உடல் முழுவதும் எண்ணெய் பூசிக்கொண்டு, மண்தரையில் உருண்டாலும், ஒட்டுவது தான் ஒட்டும் என்பார்கள். எனவே ஆயிரம் கற்றாலும், பெற்றாலும் இறைவனால் தரப்படுகிற அறிவு தான் நிரந்தரமானதாகவும், பயனுள்ளதாகவும் இருக்கும். இதனால் அறிவை பெறுவதற்கு நாம் பலவகையில் முயற்சித்தாலும் அதற்காக இறைவனிடம் பிரார்த்தனை செய்வதை தவிர்க்க கூடாது.

அறிவு வளர்ச்சிக்கான பிரார்த்தனையை கடவுளிடம் வைப்பதற்கு மிகவும் ஏற்ற நேரம் வைகாசி மாத பௌர்ணமி தினமாகும். காரணம் வைகாசி பௌர்ணமி விசாக நட்சத்திரத்தில் வருகிறது. விசாக நட்சத்திரம் இறைவனாகிய முருகனின் அவதார நட்சத்திரமாகும். அதனால் தான்



யோகி ஸ்ரீ ராமானந்த குரு

www.aanmeegamalar.com





www.aanmeegamalar.com




முருகனுக்கு விசாகன் என்ற திருப்பெயரும் உண்டு. முருகப்பெருமான் அறிவுக்கடல் ஞானமலை உயிர்கள் பெற்று இருக்கும் அறிவு அனைத்தும் முருகனிடமிருந்தே வருகிறது.

வைகாசி பௌர்ணமி அன்று முருகனை வழிபட்டால், ஞானத்தை வாரி வழங்குவான் என்பது ஐதீகம் இந்துக்களுக்கு மட்டும் வைகாசி பௌர்ணமி சிறந்தது அல்ல. புத்த மதத்தினருக்கும், அந்த நாள் மிக புனிதமான திருநாளாகும். அன்று தான் புத்தபெருமான் போதி மரத்தடியில் ஞானம் பெற்றார். எனவே வைகாசி பௌர்ணமி புத்த பூர்ணிமா என்றும் கொண்டாடப்படுகிறது. புத்தர் பிறந்தது ஞானம் பெற்றது பரிநிர்வாணம் என்ற முக்தி அடைந்தது எல்லாமே வைகாசி பௌர்ணமியே ஆகும்.



இந்த தினத்தில் சிவமைந்தனான முருகனை, வணங்கி புனித நீர்நிலைகளில் நீராடி தயிர் சாதம், பானகம், நீர் மோர் முதலியவற்றை தானம் கொடுக்க வேண்டும். படிக்க விருப்பமிருந்தும், வசதி இல்லாத குழந்தைகளுக்கு படிப்பிற்கு பணம் கட்டலாம் குறைந்தபட்சம் நோட்டு புத்தகமாவது வாங்கி கொடுக்கலாம். இப்படி செய்தால் வைகாசி பௌர்ணமி அறிவை வாரி வணங்கும் முழு நிலா பொழுதாக திகழும்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434



# தேன் மகத்துவம்

தேன் உலக மக்களுக்கு இறைவனால் அளிக்கப்பட்ட அமிர்தம் என்றாலும் மறுப்பதற்கில்லை. உலகில் உள்ள அனைத்து பொருட்களுக்கும் அரசன் தேன் என்றாலும்ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனென்றால் உலகில் உள்ள அனைத்து உணவுப் பொருட்களும் கெட்டும் போகும் தன்மை உடையது ஆனால் தேன் மட்டும் எத்தனை ஆண்டுகள் ஆனாலும் கெட்டுப்போகாது.

அதிகபட்ச மாற்றம் எதுவென்றால், உறைந்து கிறிஸ்டல் கற்களாக மாறும். அப்போது சூடான தண்ணீரில் தேன் பாட்டிலை வைத்தால் இளகி மீண்டும் பழைய நிலைக்கு மாறிவிடும். (தேனை மைக்ரோவேவிலோ அல்லது அடுப்பிலோ வைத்து சூடு செய்தால் அதில் உள்ள சத்துக்கள் அழிந்துவிடும்) இதுதான் தேனின் இயல்பு. ஆனால் இந்த தேன் மனித இனத்திற்கு மிகுந்த பயனுள்ள ஆயுர்வேத மருந்தாகப் பயன்படுகிறது.

இன்றைய சூழ்நிலையில் இதயக் கோளாறு மிகுந்த வேகமாக பரவிவரும் ஒரு கொடிய நோயாக இனம் காணப்படுகிறது. எல்லா வயதினரையும் தாக்கும் நோயாகவும் இது உள்ளது. இந்த நோய் ஏற்பட மிக முக்கிய காரணம் மன உளைச்சல், பரம்பரை, கொழுப்பு சத்து கூடுதல் என்று பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. இவ்வாறான கொடிய நோயை எளிதாக தீர்க்கும் சக்தி தேனுக்கு உண்டு.

### இதய நோய்க்கு மருந்து

இதயத்தின் ரத்த குழாய்களில், நாளங்களில் அடைப்பு ஏற்படுவதால், போதிய ரத்தம் கிடைக்காமல் இருதயம் செயல் இழக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் தினமும் காலையில் லவங்கப்பட்டை பொடியை தேனுடன் சேர்த்து குழைத்து சிற்றுண்டியுடன் சேர்த்து சாப்பிடுங்கள். 2 கரண்டி தேன், 1 கரண்டி பொடி என்ற கணக்கில் ரொட்டியுடன் அல்லது நீங்கள் சாப்பிடும் சிற்றுண்டியுடன் சாப்பிட்டு வாருங்கள்.

இதய நோய் உங்களை மீண்டும் அனுகாது. ஏற்கெனவே உங்களுக்கு மாரடைப்பு வந்திருந்தால், மீண்டும் நிச்சயம் வராது.

இதய நோய் உள்ளவர்களுக்கு சுவாசம் மற்றும் இதய துடிப்பு பலவீனமாக இருக்கும். அவர்களுக்கு இந்த தேனும் லவங்கப்பட்டை பொடியும் ஒரு வசப்பிரசாதம். 1 மாதத்தில் அவர்களுக்கு வித்தியாசம் தெரியும்.

அமெரிக்கா, கனடா நாடுகளில் மருத்துவமனைகளில் இந்த உணவை கொடுத்து வருகிறார்கள். இதனால் அதிசயத்தக்க மாற்றங்களை பதிவு செய்துள்ளார்கள். இரத்த ஓட்டத்தில் உள்ள அடைப்பை நீக்கி, இரத்த ஓட்டத்தை அதிகரித்து, மூச்சு வாங்குவதை குறைத்து, இதய துடிப்பை பலப்படுத்தி, இதய நோயை விரட்டி அடிக்கும் அற்புத சக்தி கொண்டது தேனும் லவங்கமும்.

### ஆர்த்ரிரைட்டீஸ் என்கின்ற முடக்குவாதம்:

மூட்டு வலி உள்ளவர்கள், நடக்க முடியாமல் கஷ்டப்படுகிறவர்களுக்கு தினமும் காலை மற்றும் இரவு நேரங்களில் 1 கப் வெந்நீரில் 2 தேக்கரண்டி தேன், 1 சின்ன தேக்கரண்டி லவங்க பொடியை கலந்து குடித்து வாருங்கள். ஒரே வாரத்தில் உங்கள் வலி குறைவது தெரியும்.

'எத்தகைய கடுமையான மூட்டுவலியாக இருந்தாலும் 1 மாதத்தில் குணம் நிச்சயம்' என்று அடித்து சொல்கிறார்கள் கோபன் ஹேகன் பல்கலைகழக ஆய்வு மையத்தினர். 200 மூட்டு வலிகாரர்களை கொண்டு ஒரு சோதனை நடத்தினர். தினமும் காலை 1 தேக்கரண்டி தேனும் 1/2 தேக்கரண்டி லவங்க பொடியும் கலந்து கொடுத்து வந்தனர்.

ஒரே வாரத்தில் 73 நோயாளிகள் வலி நிவாரணம் கண்டனர். ஒரு மாதத்தில் அனைவரும் நடக்கத் தொடங்கினர்.



### சிறுநீர்குழாய் கிருமிகள்:

2 தேக்கரண்டி லவங்கபொடி, 1 தேக்கரண்டி தேன் ஆகியவற்றை இளஞ்சூட்டு தண்ணீரில் கலந்து குடித்து வர, சிறுநீர் குழாய்களில் உள்ள கிருமிகள் அழிந்து விடும். கோடைக்கலத்தில் இது அரு மருந்து.

### கொலஸ்ரால் என்னும் கொழுப்பு சத்து:

2 மணி நேரங்களில் உடம்பில் உள்ள கொழுப்புச் சத்தை 10% குறைக்கும் தன்மை கொண்டது தேன்.

2 தேக்கரண்டி தேன், 3 தேக்கரண்டி லவங்க பட்டை பொடியையும் 16 அவுன்ஸ் தண்ணியுடன் கலந்து குடியுங்கள். 2 மணி நேரத்தில் உங்கள் கொழுப்பு சத்து அளவு குறையும்.

ஒரு நாளில் 3 முறை 2 கரண்டி தேன், 1 கரண்டி லவங்க பொடியை மிதமான வெந்நீரில் கலந்து குடித்து வர நிச்சயம் கொலஸ்டிரால் கரைந்து விடும்.

சாதாரணமாகவே உங்கள் உணவில் தேனை சேர்த்து கொண்டு வாருங்கள். கொழுப்பு சத்து நோய் வரவே வராது.

### ஜலதோஷம்:

சூடான தண்ணீரில் 1 தேக்கரண்டி தேனை வைத்து இளஞ்சூடாக்கி அதனுடன் 1/4 தேக்கரண்டி லவங்க பொடியை குழைத்து 3 நாளைக்கு எடுத்துக் கொள்ளுங்கள்.

சைனஸ், சளி, இருமல் என எல்லாமே ஓடி போகும்.

### முகப்பருக்கள் மறைய:

3 தேக்கரண்டி தேன், 1 தேக்கரண்டி லவங்கப் பொடி இரவு படுக்கும் போது இதை குழைத்து பருக்களின் மேல் தடவுங்கள். காலையில் வெதுவெதுப்பான நீரில் முகத்தை அலம்புங்கள். தொடர்ந்து 2 வாரம் இதை செய்து வர பருக்களை வேரோடு அழிந்துவிடும்.

### சரும நோய் தீர:

சொறி, படை போன்ற பல சரும நோய்களை குணப்படுத்தும் தேன், லவங்க பொடி இரண்டையும் சம அளவில் எடுத்துக் கொண்டு குழைத்து இந்த சரும நோய்களின் மேல் தடவி வர இந்த சரும் நோய்கள் குணமாகும்.

### புற்று நோய்க்கு அருமருந்து:

ஆஸ்திரேலியா, ஜப்பான் நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வின் முடிவில், 'வயிறு மற்றும் எலும்பில் வரும் புற்று நோய்களை குணப்படுத்தலாம்' என்று தெரியவந்துள்ளது. ஒரு தேக்கரண்டி தேன், ஒரு தேக்கரண்டி லவங்க பொடி என்ற கணக்கில் குழைத்து, தினமும் 3 வேளை உண்ண ஒரே மாதத்தில் புற்று நோய் குறைந்து விடுமாம்.

# மானிக் பிரபு மஹராஜ்

## ஸ்ரீ தத்த அவதாரங்கள் - 4

ஸ்ரீவத்ஸ கோத்ரம் தேசஸ்த ரிக்வேதி ப்ராஹ் மண தம்பதியரான ஸ்ரீ மனோஹர நாயக ஹரகுடே, ஸ்ரீ பய தேவி, தொடர்ந்து 16 வருடங்கள் குரு சரித்திரத்தை பாராயணம் செய்ததன் பலனாக, குரு தத்தாத்ரயரே நேரில் காட்சி அளித்து தானே அவர்களுக்கு மகனாக பிறப்பதாக உறுதியளித்து, மகாராஷ்டிர மாநிலம், கல்யானுக்கு அருகில் உள்ள லத்வந்தி என்னும் கிராமத்தில் டிசம்பர் 22, 1817 அன்று (மார்கஷீர்ஷா பூர்ணிமா தத்த ஜெயந்தி, ஷாகா 1739 ஈஸ்வர நாம சம்வஸ்தரா) ஆண்டு பிறந்தார்.

இவருக்கு தாதாசாகேப் என்று ஒரு மூத்த சகோதரரும், தத்யா சாஹேப் என்று அழைக் கப்படும் ஒரு தம்பியும், சிமனாபாய் என்ற சகோதரியும் இருந்தனர்.

மானிக் பிரபுவின் முஸ்லீம் பக்தர்கள் அவரை மெஹபூப் சுபானியின் அவதாரமாக மதித்தனர். அதே நேரத்தில் அவரது லிங்காயத் பக்தர்கள் அவரை பசவண்ணாவின் ஒரு வடிவமாக பார்த் தார்கள். மராத்தி, கன்னடம், இந்தி, உருது மற்றும் சமஸ்கிருதம் போன்ற பல்வேறு மொழிகளில் ஏராளமான பஜன்கள் மற்றும் பதங்களை ஸ்ரீ பிரபு இயற்றினார்.

இந்த குழந்தைக்கு ஓர் அபூர்வ சக்தி இருந்தது. இவருக்கு எதிரில் நின்று யாராகினும் தனது பிரச் சனைகளை கூறினால் அதற்கு உடனடி நிவாரணம் பெற்று பல்லாயிரக்கணக்கான மக்கள் நிம்மதி பெற் றனர்.

இவருக்கு ஏழு வயதில் பெற்றோர் உபநயனம் செய்வித் தனர். இவர் செய்வீக குழந்தை அல்லவா ஆதலால் இவர் அனைத்து மந்திரங்களையும் ஓதி பண்டிதர் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார்.



படிப்பில் சிறிதும் நாட்டமின்றி இவர் திரிந் ததை அறிந்த பெற்றோர் தனது மகனை தாய் மாமா இல்லத்திற்கு அழைத்து சென்று ஓர் உத்தி யோகத்தில் சேர்க்கும் படி கூற, அவரும் சேர்த்து விட, அந்த வேலையிலும் நாட்டம் இன்றி சிறிது மனக்கசப்போடு தாய் மாமா வீட்டில் இருந்து வெளியேறினார்.

இவர் புரிந்த லீலா வினோதம் சற்று வித்தியாச மானது. ஓர் பக்தனுக்கு புலியின் உருவில் காட்சி அளித்து அந்த க்ஷணம் முதல் அனைவராலும் 'மானிக் ப்ரபு' என்று அழைக்கப்பட்டார்.

ஹனுமான் ஆலய பூஜாரிக்கு தத்தரின் வடிவில் காட்சி அளித்தது கல்யாண் நகரில் காட்டு தீ போன்று பரவி இவர் தத்தரின் அவதாரம் என்ற உண்மை அனைவருக்கும் தெரிந்து இவரிடம் ஆசி பெற வந்தனர்.

காசி, பண்டரிபுரம், பரளி வைத்தியநாதர், பீதார் மற்றும் பல புண்ணிய தலங்களுக்கு சென்று மக்களிடம் இறை நம்பிக்கையை வளர்த்தார்.

தனது பக்தர்களின் பல்வேறு வேண்டுதல் களையும், துன்பங் களையும், வேதனைகளையும் நீக்கினார். அனைத்து சமூகங்களும் அவரை மதித்ததால் அவருக்கு 'சகலமாதாச்சார்யா' என்ற பட்டம் வழங்கப்பட்டது. ஷீர்டி சாய் பாபாவை போன்று ஹிந்துமுஸ்லீம் பக்கதர்களிடையே ஓர் பாலமாக விளங்கினார்.



எஸ்.ரகுராமன்

**அற்புதங்கள்**

- இறந்த சிறுவனை தனது சக்தியால் உயிர்ப்பித்தார்.
- கர்ப்பிணி பசுவை அடித்த முரடனுக்கு அந்த பசுவின் மூலம் தக்க பாடம் அளித்து திருத்தினார்.
- விட்டல் பாபாவான பண்டரிநாதனை தொட்டு வணங்க முற்பட்டபொழுது பூஜாரி அவரை தடுக்க உடனே பண்டரிநாதனின் கழுத்தில் உள்ள மாலை மானிக் பிரபு கழுத்தில் விழுந்து ஸ்ரீ விட்டலனாகவே காட்சி அளித்தார்.
- பக்தர்களுடன் பயணம் செய்கையில் கொடிய விஷ நாகம் தென்படஅதன் பாஷையில் பேசி அதனை போக வைத்தார்.

**முக்தி**

ஹூம்னமாபாத் என்னும் மானிக் நகர் சென்று ஆஸ்ரமம் அமைதி 1865 ஆம் ஆண்டு குழிக்குள் அமர்ந்து கொண்டு ஜீவா சமாதி அடைந்தார். இவரின் ஆத்ம இவரின் மூல ரூபமான ஸ்ரீ தத்தரிடம் சென்று கலந்தது. ஹுமனாபாத் பேருந்து நிலையத்திலிருந்து 2 கி.மீ தூரத்திலும், பிதாரில் இருந்து 51 கி.மீ தூரத்திலும் ஸ்ரீ மானிக் பிரபு கோயில் அமைந்துள்ளது.

– எஸ்.ரகுராமன்
தொடர்பு எண்: 9940349593

## நேர் மறை சக்திகளை பெற....

- விலை உயர்ந்த பொருட்களை இழந்து கொண்டே இருந்தால் சனிக்கிழமைகளில்வெளிர் நீல துணியில் எள் உருண்டைகள் வைத்து இரவு நேரத்தில் (89) தானம் செய்ய, விரயம் நிற்கும்.
- சிலருக்கு சின்ன வயதில் இருந்தே பண கஷ்டம் மற்றும் தொல்லைகள் தொடர்ந்த வண்ணம் இருக்கும் அப்படிப்பட்டவர்கள் யாரிடமும் இனாமாகவோ அல்லது நன்கொடையாகவோ எதுவும் பெறக் கூடாது. அதே போல் செய்யாத வேலைக்கு பணம் பெறுவது கூடாது. ஒவ்வொரு திங்களும் ஏதேனும் கோவிலில் 5 பாதாம் பருப்புகள் தானமாக வழங்கி வர நிலையில் நிச்சயமான மாற்றம் ஏற்படும்.
- உடல் நிலை மற்றும் நீண்ட ஆயுளுக்கு தினசரி 'ஓம் சாவித்ரி யாயை நமஹ' மந்திரம் கூறி வர உடலில் முன்னேற்றம் உண்டாகும்.
- தினசரி அரச மர வழிபாடு செய்து வர நேர் மறை சக்திகள் நம்முடனே இருக்கும்.

# சிவனின் 3வது கண்



“த்ரியம்பகன்” என்பது சிவனின் திருநாமங்களில் ஒன்று. இது மூன்றாவது கண்ணைக் குறிக்கும். மற்ற இரண்டு கண்களும் புறக்கண்கள். பார்வையில் படும் குப்பைகளையெல்லாம் அவை மூளைக்கு புகட்டிக் கொண்டிருக்கின்றன. இதன் மூலமாக யாரையாவது பார்த் தால், பழைய அபிப்பிராயங்கள் உங்க ளுக்குள் புறப்படுகின்றன. இந்த இரண்டு கண்களும் உண்மையை பார்ப்பதில்லை. எனவே அறித லுக்கென்றே சிவனின் மூன் றாவது கண் திறக்கிறது. அதுவே ஞானக்கண். இந்திய மரபில் அறிதல் என்பது படிப்பால் பெறுவதல்ல. புத்தகங்கள் தருவதல்ல. ஆழ்ந்த புரிதலையே அறி தல் என்கிறோம். இந்த மூன்றாவது கண் திறக்கிற போதுதான் சிவனை உணர் கிறீர்கள்.

படித்த மனிதர்கள் எல்லோருக்குமே ஐசக் நியூட்டன் புவியீர்ப்பு விசையைக் கண்டறிந்த கதை தெரியும். ஆப் பிள் பழம் கீழே விழுந்தது பற்றியே அனைவரும் பேசுகிறார்கள். ஆனால், செடியாக இருந்த அந்த ஆப்பிள் மரத்தை ஒரு சக்தி மேல் நோக்கி வளர்த்திருக்கிறதே அது குறித்து யாரும் பேசுவதில்லை.

ஆனால் இப்போது ஆய்வுகளின் மூலம் மனிதனுக்கு ஒரு மூன்றாவது கண் இருப்பதாகவும் அதன் மூலம் பல அற்புதங்கள் நிகழ்த்த முடியும் என்றும் தெரியவருகிறது. இந்த மூன்றா வது கண் பெயர் பினியல் சுரப்பி. (Pineal Gland).

பிரெஞ்சு அறிவியல் நிபுணரான Rene Descartes (René Descartes was a French philosopher, mathematician and writer who spent most of his life in the Dutch Republic (1596-1650) இதனை ஆன்மாவின் இருக்கை என குறிப்பிடுகிறார். இது இந்துக்களின் ஆக்ஞா சக்கரத்துடன் (நெற்றி சக்கரம்) தொடர்புடையது. சிவபெருமானின் நெற்றிக்கண் எந்த வடிவில் எப்படி காணப்படுகிறதோ அதே மாதிரி இதுவும் அமைந்துள்ளது.

இந்த பினியல் சுரப்பி ஒளியின் மூலம் தூண்டப்படுகிறது. இது மெலெண்டொனின் எனும் திரவத்தை சுரக்கிறது. இத்திரவம் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது. மன அழுத்தத்தை குறைக்கிறது.

நமது இந்து மதம் இந்த சுரப்பியை தூண்டுவதன் மூலம் ஞானம் / பேரின்பம் அடையலாம் என கூறுகிறது. இந்த மூன்றாவது கண்ணை தூண்டுவதன்மூலம் முக்காலங்களை அறியும் தன்மை, விழிப்புணர்வு, பல நல்ல சக்திகள் கிடைப்பதாக கூறப்படுகிறது.

குண்டலினி தியானம் மூலம் இந்த மூன் றாவது கண்ணை தூண்டலாம். நம் குருமார்கள் தீட்சயளிக்கும் பொருட்டு புருவ மத்தியில் ஆசீர் வாதம் செய்வது பொருட்டு தகுந்த பயிற்சியுடனும் நம்பிக்கையுடனும் இந்த ஆக்ஞா சக்கரத்தை இயங்கச்செய்து அளவில்லா ஆனந்தத்தையும் சக்தியையும் பெறலாம்.

இந்த ஆக்ஞா சக்கரத்தை தூண்டும் சக்தியாக குங்குமம் விளங்குகிறது. இதனால்தான் பெண் கள் தங்களது வலது கையின் மோதிரவிரலால் குங்குமத்தை நெற்றியின் புருவங்களுக்கு மத்தியில் அழுத்தமாக வைக்க வேண்டும் என்று கூறப்பட்டது.

ஒருவர் தகுந்த பயிற்சி பெற்றால் நினைவு களைக் குவித்து நெற்றிப்பொட்டின் ஊடாக வெளியேற்றி தீயை கூட வரவைக்கலாம். (சிவன் திரிபுரங்களை எரித்த கதை கேள்விப் பட்டி ருப்பீர்கள்). மனதிலுள்ள தீய எண்ணங்களை எரித்து நல்ல எண்ணங்களை வளர்க்கலாம் (சிவன் காமனை எரிந்தத கதையும் ஏன் முருகப்பெருமான் தோன்றிய கதையும் அனைவரும் அறிந்ததே )

இதை தகுந்தபயிற்சியுடன் எப்போதும் விழிப்பு நிலையில் வைத்திருந்தால் நாம் திறமைசாலிகளாக வாழலாம். அப்படி நாம் வாழக்கூடாது என்று நினைக்கும் சிலர்தான் இதயெல்லாம் போலி என்று கதைபரப்பினார்களோ தெரியவில்லை.

நம் முன்னோர்களின் நல்ல சிந்தனைகளையும் வழிகாட்டல்களையும் நமது அறி வீனத்தால் போலி என்று கேலி செய்து இழந்து விட்டோம். இனியாவது விழிப்போம். இந்துமதம் பகுத்தறிவுள்ள விஞ்ஞானத்துடன் இணைத்த மதம். அதன் சிறப்பை மெல்ல மெல்ல இப்போதுதான் சில மேற்கத்திய விஞ்ஞானிகள் கண்டுபிடித்து நமது அறிவு ஜீவிகளுக்கு புரிய வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

கோவில்கள் கட்டி வைத்ததற்கும், பரம் பொருள் ஒன்றே என்று கூறும் இந்துமதம் கடவுளை பல நாமங்களில் அவரவர் விருப்பப்படி வழிபட அனுமதிப்பதற்கும் மற்றும் அதன் சில கொள்கைகளுக்கும் வழிபாட்டு முறைகளுக்கும் பின்னால் பலமான காரணங்கள் உள்ளன.இதை விளங்கிக்கொள்ளும் அறிவு குறைவாக உள்ள காரணத்தால் அதை பொய் என்றோ மூட நம்பிக்கை என்றோ கூறக்கூடாது.

அதன் சில வழக்கங்களை சுயநலத்திற்காக சிலர் துஷ்பிரயோகம் செய்தால் அதற்கு மதம் பொறுப்பல்ல. முன்னோர் செயலில் பல அர்த்தங்கள் உண்டு என்பதை ஆராய்ந்து பார்ப்பது அவசியம். காலச் சூழலுக்கு ஏற்ப கடைபிடிக்க முடியாத சில விஷயங்களை புறந்தள்ளினாலும், மனித இன மேன்மைக்கு பயன்படும் முன்னோர்களின் வழிகாட்டுதல் நெறி கள் பலவற்றை பின்பற்றினாலே வாழ்க்கை முறை இனிமையாக அமையும். நாம் தற்போது மறந்து, மறுத்து வரும் பல வழிமுறைகளை வெளிநாட்டினர் ஆராய்ந்து, நம் முன்னோர் வழிகாட்டுதல் நெறிமுறைகளை அவர்கள் கடைபிடிக்கின்றனர் என்பது தற்போதைய நடைமுறையில் கண்கூடாக நாம் பார்த்து வருகிறோம்.

– தொகுப்பு: நடராசன்


ஆன்மிகமலர் மெயில் புக்

# ஆன்மீக வழியில் அமைதி

முந்தைய தலைமுறை மக்கள் அனைவரும் எளிமையான கூரை வீடு, ஓட்டு வீடு, காரை வீடுகளில் வசித்து வந்தார்கள். குடியிருக்கும் வீடுகளுக்கு அருகிலேயே கிணறு வெட்டி அதில் இருக்கும் நீரை வாளிகொண்டு, அவன் தேவைக்கு தகுந்தவாறு தண்ணீரை இறைத்து, இன்பமாக வாழ்ந்து வந்தான். காலப்போக்கில் மக்கள் பலவிதமான ஆடம்பரமான வீடுகளில் வசிப்பதற்கு கற்றுக் கொண்டான். அவன் குடியிருக்கும் வீட்டுக்குள் தண்ணீர் குழாய்கள், கழிப்பறைகள் என்று வசதி வாய்ப்புகளை பெருக்கிக்கொண்டு, அப்படிப்பட்ட வீடுகளில் வசிப்பதில் சுகம் கண்டான். அப்படி வசதியாக வாழ்ந்த மனிதன், சூழ்நிலையின் காரணமாகவோ இயற்கையின் சீற்றத்தின் காரணமாகவோ ஏதோ ஒரு காரணத்தினால் தான் வசிக்கும் வசதியான வீடுகளை, மாடமாளிகைகளை இழந்து விடுகிறான் என்று வைத்துக் கொள்வோம்.

முன்பு அவன் வாழ்ந்த எளிமையான கூரை வீடு, ஓட்டு வீடு, காரைவீடு போன்ற வீடுகளில் வசிப்பதற்கு அவனது மனம் விரும்புவதில்லை. ஏன் என்றால் அவன் ஆடம்பரமான வீடுகளில் வசதியாக வாழ்ந்து சுகம் கண்டு அதிலேயே மூழ்கி விட்டான் என்பதைவிட, அதற்கு தன்னை அடிமையாகி விட்டான் என்றுதான் கூறவேண்டும். அதிலிருந்து மனம் மீள்வதற்கு அவனால் முடிவதில்லை. அவன் முன்புபோல் எளிமையான வீடுகளில் வசிப்பதற்கு மனம் இடம் கொடுத்தாலும், அவனது தன்மானம் அப்போது இடம் கொடுப்பதில்லை. இந்த மனநிலையானது மனிதனை அமைதியற்ற வாழ்க்கைக்கு துன்பநிலைக்குத்தான் அவனை இழுத்துக்கொண்டு செல்லும் என்பதையும் அவன் உணர்ந்து கொள்வதுமில்லை. மனிதன் ஆடம்பரமான வீடுகளில் வசிப்பது பற்றி ஆன்மீக வழியில் சிந்தித்துப் பார்க்கும்போது அதுவும் ஒருவகை பேராசைதான்.

மனிதன் ஆரம்பத்தில் கூரைவீடு, ஓட்டுவீடு, காரை வீடுகளில் அவன் வாழும்போது மன அமைதியுடன் கூடிய ஆரோக்கியமான வாழ்க்கை, அவனுக்கு இப்போது மாளிகையில் அடுக்குமாடி வீடுகளில் வசிக்கும்போது கிடைக்கிறதா என்று சிந்தித்துப் பார்த்தால் ‘இல்லை’ என்றுதான் கூறவேண்டும். ஏன் என்றால் அவன் ஆடம்பரமாக வசதியாக வாழக்கற்றுக் கொண்டு விட்டான். இப்போது வசதிபடைத்த சிலர் தாங்கள் வசிக்கும் வீடுகளை கிரிக்கெட் மைதானம்போல் அளவுக்கு அதிகமான நிலப்பரப்பில் கட்டிக்கொள்கிறான். அதில் வசிப்பவர்கள் என்று எண்ணிக்கையை எண்ணிப்பார்த்தால் பெரும்பாலும் அவர்கள் குடும்பத்தில் உள்ள இரண்டு அல்லது மூன்று நபர்கள்தான் இருப்பார்கள். அவ்வளவு பெரிய மாளிகைகள் போன்ற வீடுகள் அவர்களுக்கு அவசியம்தானா என்று சிந்தித்து பார்க்க வேண்டும்.




அவன் வாழும் அந்த ஆடம்பரமான வீட்டின் பரப் பில் பல குடும்பங்கள் வசிக்கலாம் என்பது பற்றி அவர்கள் யாரும் சிந்தித்தும் பார்ப்பதில்லை. இதற்கு முக்கியமான காரணம் சமூகத்தில் தன்னை உயர்வாகக் காட்டிக்கொள்வது மற்றும் அவனது சுயநலம்தான் மற் றொரு காரணம் என்று கூறவேண்டும். அப்படிபட்ட மாட மாளிகையில் வசதிபடைத்தவர்கள் வாழ்ந்து ஒருவகை இன்பத்தில் தங்களைத் தாங்களே சமுதாயத்தில் உயர்ந்தவர்கள் (status) என்று மற்றவர்களிடமிருந்து வித்தியாசப்படுத்திக் காட்டிக்கொள்கிறார்கள். பொதுவாக மனித மனங்கள் எதிர்பாராமல் கிடைத்த இன்பங்களை சுகங்களை நுகர்ந்தபின், அதில் இருந்து விடுபட இயல்பாக மனிதமனங்கள் மறுக்கிறது. ஆனால் எதிபாராமல் வரக்கூடிய துன்பங்கள் துயரங்களிலிருந்து விடுபடுவதற்கு மட்டும் மனிதமனங்கள் துடிக்கிறது. இன்பங்களிலிருந்து விடுபட்டு மனஅமைதி பெறுவதற்கு மனிதமனம் துடிப்பதில்லை. மனிதர்கள் இன்பங்கள் துன்பங்களிலிருந்து எப்படி விடுபடவேண்டும் என்பதை ஆன்மிகம் வழிகாட்டுவதோடு, அவனை அமைதியான வாழ்க்கைக்கும் அவனையும் அறியாமல் அழைத்துச் செல்கிறது.

ஒவ்வொரு மனிதனும் முதலில் தனக்கு அடிப்படையான வசதிகள் மட்டும் கிடைத்தால் போதும் என்றுதான் விரும்புகிறான். அவன் விரும்பியபடி வசதி வாய்ப்புகள் கிடைத்துவிட்டால் அதில் அவன் மனம் இயல்பாகவே திருப்தி அடைவதில்லை. அதன் பின்பு ஆடம்பரமான வசதிகள் வாய்ப்புகளுடன் வாழவேண்டும் என்று நினைக்க ஆரம்பித்து விடுகிறான். அதற்காக அவன் நேர்மையற்ற முறைகளில்கூட பலவிதமான முயற்சிகளை மேற்கொள்வதற்கு துணிகிறான். அதோடு

www.aanmeegamalar.com





• ஆன்மீகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

அவனோட எண்ணம் செயல்பாடுகள் நின்று விட்டால் பரவாயில்லை. அவ்வாறு தான் விரும்பிய வசதி வாய்ப்புகள் கிடைத்து விட்டால், அந்த வசதி வாய்ப்புகள் தனக்கு சற்றும் குறைந்து விடக்கூடாது என்ற பயத்துடன் மனதில் நினைக்கவும் ஆரம்பித்து விடுகிறான். பிறகு தன்னோட வசதியான சுகமான இந்த ஆடம்பரமான வாழ்க்கையானது தன்னோட வாழ்நாள் முழுதும் அவைகள் தொடர வேண்டும் என்றும் விரும்புகிறான்.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

எடுத்துக்காட்டாக ஒருவன் வீடு கட்டுவதற்கு தோண்டும்போது ஒரு தங்க நாணயம் கிடைக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அவன் எதிர்பாராமல் கிடைத்த தங்க நாணயத்தினை பார்த்தவுடன் மிகவும் மகிழ்ச்சி அடைகிறான்.

அதன் பிறகு அவன் தோண்டும் இடமெல்லாம் தனக்கு தங்கம் கிடைக்கிறதா என்று பார்ப்பதற்கு ஆரம்பித்து விடுகிறான். புத்தர் போதித்த ஆசையே துன்பத்துக்குக் காரணம் என்பதை அப்போது அவன் உணர்வதில்லை. ஒரு மனிதன் வாடகை வீட்டில் வசிக்கும்போது அவன் நினைத்தால் அதில் இன்பமாக வசிக்கலாம். ஆனால் அவன் மனதில் நமக்கு ஒரு சொந்த வீடு இருந்தால் நிம்மதியாக வசிக்கலாம் என்று நினைக்கிறான். அதில் தவறு ஒன்றும் இல்லை. அவன் எப்படியோ ஒரு சிறிய வீட்டினை சொந்தமாக வாங்கி விட்டான் என்று வைத்துக் கொள்வோம்.

அவன் வாங்கிய சொந்த வீட்டில் அமைதியாக இருக்கிறான் என்றால் இல்லை என்றுதான் கூறவேண்டும். தான் வாங்கிய வீட்டினை காட்டிலும் தன்னோட நண்பன் கட்டிய பெரிய வீட்டினை பார்த்தவுடன் அந்த பெரியவீட்டினைப் போன்று மற்றொரு வீட்டினை வாங்குவதற்கு நினைக்க ஆரம்பித்து விடுகிறான். அதற்காக அல்லும் பகலும் அவன் கவலைப்படுவதற்கு ஆரம்பித்து விடுகிறான். மனிதன் இப்படி ஒவ்வொன்றாக ஆசையை மென்மேலும் வளர்த்துக் கொண்டேயிருந்தால் எப்படி அவனுக்கு அவன் தேடும் விரும்பும் அமைதியான கவலையில்லாத வாழ்வு கிடைக்கும். இப்படித்தான் ஒரு பொருளை அடைந்தவுடன் மற் றொரு பொருளை அடைவதற்கு அவன் மனமானது ஏங்கிக்கொண்டு குரங்குபோல் தாவிக்கொண்டே போய்க்கொண்டிருக்கிறது.

பிறகு எப்படி அவனுக்கு அவன் தேடும் விரும்பும் அமைதி கிடைக்கும். இதனைக் கருத்தில்கொண்டுதான் ‘போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து’ என்று ஆன்மிகம் மனிதர்களை ஆசைக்கு அணை போடச்சொல்லி வலியுறுத்திக் கூறுகிறது.

மனிதன் தனது முடிவில்லாத ஆசைக்கு, இன்பத்துக்கு வாழ்நாள் முழுவதும் பொருளைத்தேடிக்கொண்டும் கவலைப்பட்டுக்கொண்டும் இருக்கிறான்.

அதனால் அவன் வாழ்வில் அவனை அறியாமல் அவனது அமைதியான வாழ்க்கையையும் காலத்தையும் இழந்து கொண்டிருக்கிறான். அவன் தன்னோட ஆடம்பரமான எண்ணங்களை தன்னை விட்டு அகல வேண்டும் என்று நினைத்தால், அந்த எண்ணங்களை அகற்றுவதற்கு முயற்சி செய்தால், நிரந்தரமான அமைதியான வாழ்வு அவனுக்கு உறுதியாகத் தவறாமல் கிடைக்கும்.

உங்கள் உள்மனதில் விருப்பமுடன் ‘இந்த ஆடம்பரமான வாழ்வை ஒருபோதும் நான் விரும்பமாட்டேன். எனக்கு நல்ல வாழ்வைக் கொடு. மனஅமைதியைக் கொடு. அதற்கான சூழ்நிலையை எனக்கு கொடு’ என்று உணர்வுடன் இடைவிடாமல் நாள்தோறும் இறைவனிடம் வேண்டிக்கொள்ளுங்கள். அவ்வாறு இடைவிடாமல் வேண்டும்போது நாம் விரும்பும் தேடும் மன அமைதி கிடைக்கும். வாழ்வில் ஆடம்பரமான ஆசைகளை மனிதன் உள்மனதில் இருந்து நீக்கினால், அவன் தேடும் விரும்பும் அமைதி கிடைக்கும் என்று அறிந்துகொண்டிருந்தும், தன்னோட ஆசைகளுக்கு ஒரு எல்லையினை வகுத்து அமைதியாக வாழ்வதற்கு பெரும்பாலானவர்கள் விரும்புவதில்லை என்பதுதான் யதார்த்தமான உண்மையாகும். நமது பேராசைக்கெல்லாம் இந்த ஆன்மீகம் அணை போடுகிறது. புராணக்கதைகள், உபநிடதங்கள் சாஸ்திரங்கள் இதிகாசங்கள் அமைதியான வாழ்க்கைக்கு, தத்துவக்கதைகள், இதிகாசங்கள் பாசுரங்கள் மூலம் வழி காட்டுகிறது.

(அமைதி தொடரும்)

எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்
கோட்டக் கலால் அலுவலர் (பணிநிறைவு)
கைபேசி: 9894043308





# வெள்ளையனை வியக்கவைத்த சித்தரின் மகிமை

சித்தர்கள் திருவிளையாட்டை ஒருசிலர் அனுபவித்திருப்பார்கள் அதில் வெள்ளையனை வியக்க வைத்த பல சித்தர்கள் இருந்தாலும் இந்த சித்தர் மிகவும் வித்தியாசமானவர்.



இந்த சித்த புருஷர்பெயர் த்ரைலிங்க ஸ்வாமி. மிக பெரிய அத்வைத ஞானிஆவார் இவர். இவருக்கு அப்பா அம்மா வைத்த பெயர் சிவராம் அகும்.

1601 வருஷம் ஆந்திராவில் பிறந்த இவர் கிட்டத்தட்ட 280 வருடங்கள் வாழ்ந்ததாக சொல்வதுண்டு. சாக்ஷாத் பரமசிவனின் அவதார மாகவே அங்கிருந்த மக்கள் இவரை பார்த்தார்கள்.

இவர் ஆந்திராவில் பிறக்கவில்லை தமிழகத்தில்தான் பிற்ந்துள்ளதாகவும் ஒரு சாரார் வாதிடுவார்கள். ஆனால் இதுவரை இவர் பிறப்பு இந்த இடம் என்று சான்றாக யாரும் கூறியதில்லை.

இந்த சித்தரின் மகிமை அலாதி.

52 ஆண்டுகள் அப்பா அம்மாவிற்கு பணிவிடை செய்த பிறகு அங்கிருந்து கிளம்பி நேபாள் முதலிய இடங்களில் பல காலம் இருந்துவிட்டு கடைசியாக காசியில் தங்கி அங்கு 150 ஆண்டுகள் வாழ்ந்துள்ளார்.

இவர் வாழ்ந்த காலத்தில் இவரது தினசரி உணவு வெறும் இலைகள் மட்டும். எப்போவாவது ஒரு சில காய்கறிகளையும் பழங்களையும் எடுத்துக் கொள்ளுவதுண்டு.

ஸ்வாமிகள் எப்போதுமே திகம்பரமாகவே இருந்துஅருள் பாவித்துள்ளார். அவதூதர். அன்றைய பிரிட்டிஷ் அரசாங்கம் பலமுறை இவரை சிறையில் அடைத்தும் இவர் வெளியே திரிந்துகொண்டிருப்பதை பார்த்து வியந்தனர்.

ஒரு தடவை நீதிமன்றத்தில் இவரை ‘ஆஜர்’ படுத்திய போது நீதிபதி கிண்டலாக இவரை நோக்கி அத்வைதம் பேசும் நீங்கள் உங்களது மலத்தை (பீயை) நீங்களே சாப்பிடுவீர்களா என்று கேட்டார். உடனே அங்கேயே மலத்தை கழித்து அதை சாப்பிட்டார். இவரது மலம் தரையில் விழுந்த அந்த க்ஷணம் நீதிமன்றம் முழுவதும் நறுமணம் வீச துவங்கியது.

அதோடு ஆங்கிலேயர்கள் இவரை துன்புறுத்துவதை நிறுத்திகொண்டனர். இம்மாதிரி நிகழ்ச்சிகள் ஏராளம். பக்தர்களுக்கு ஞானத்தை போதித்து அனுக்ரஹித்து வந்த இவர் ஒரு ஏகாதசி (டிசம்பர் 1881) அன்று சித்தி ஆனார்.

இவரது சமாதி காசியில் பஞ்சகங்கா காட்டில் உள்ளது.

Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.N.Raja, Cell: 08825844033.
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

aanmeegamalar mail book (BI MONTHLY) R.Dis No:1068/2020

ஆன்மிகமலர்

# ஞாயிறு ஸ்தலத்தின் முழு வீடியோ

## aanmeegamalar YouTube

யூ–டியூப் சேனலில் பதிவிடப்பட்டுள்ளோம்.
நமது சேனலில் சென்று இத்தலத்தை
முழுவதுமாக பார்த்து சிவனருள் பெறுங்கள்...




அற்புதமான செய்திகளை தர தயாராகிறோம்
நமது யூ–டியூப் சேனலை பாருங்கள்
aanmeegamalar செய்யுங்கள்

Subscribe
like & share
செய்யுங்கள்